DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan Sales Representative
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
PROPERTY MAX
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

Member of National Ethnic Press and Media Council of Canada
29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1519 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 16, 2025

# "இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நிகழவில்லை என்று கூறுபவர்கள் மகா பொய்யர்கள். இவ்வாறு கூறுபவர்கள் கனடாவில் எவரும் இருந்தால், நீங்கள் கொழும்பிற்கு திரும்பிச் செல்லுங்கள்"

## பிரம்ரன் மாநகரில் 'முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை ஞாபகார்த்த நினைவுத் தூபியை திறந்து வைத்து ஆற்றிய உணர்வுபூர்வமான உரையில் நகரபிதா பெற்றிக் பிரவுண் அழுத்தமாகத் தெரிவிப்பு

(பிரம்ரன் மாநகரிலிருந்து ஆர். என்.லோகேந்திரலிங்கம்)

""இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவமும் ராஜபக்ச என்னும் கொடிய கொலையாளியின் சகாக்களும் இணைந்து நடத்திய இனப்படுகொலையினால் 2009 ம் ஆண்டு இலட்சக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு இலட்சக் கணக்கான ஆதாரங்களும் சாட்சியங்களும் உள்ளன. இவ்வாறிருக்கையில் இனப்படுகொலை நிகழவில்லை என்று கூறுபவர்களும் உள்ளார்கள். இந்த நினைவுத்தூபியை இங்கு நிறுவக்கூடாது என்பதில் அந்தக் குழுவினர் தங்களால் இயன்ற அளவிற்கு முயன்றார்கள். ஆனால் பிரம்ரன் வாழ் தமிழ் மக்களும் தமிழ்க் கனேடியர்களும் இங்குள்ள அரசியல்வாதிகளும் ஒன்றாரியோ மாகாண முதல்வரும் அவரது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லோகன் கணபதி மற்றும் விஜேய் தணிகாசலம் ஆகிய தமிழ் பேசும் அரசியல் தலைவர்களும் எமக்கு பக்க பலமாக இருந்தார்கள். எனவே இவ்வாறான மகா பொய்யர்கள் தோற்றுப் போனார்கள். (தொடர்ச்சி 9ம் பக்கம்)





# கனடாவின் புதிய மத்திய அமைச்சரவையில் பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகள் அமைச்சராகப் பதவியேற்றார் ஹரி ஆனந்தசங்கரி

அண்மையில் நடைபெற்ற மத்திய பாராளுமன்றத்திற்கான தேர்தலில் வெற்றிபெற்ற லிபரல் அரசாங்கத்தின் அமைச்சரவை பதவியேற்பு வைபவம் கடந்த 12ம் திகதி திங்கட்கிழமையன்று காலை ஒட்டாவா மாநகரில் நடைபெற்றது. இதில் பிரதமராக மார்க் கார்னி அவர்களும் மேலும் 30 அமைச்சர்களும் பதவியேற்றார்கள். இதில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் நீதி அமைச்சராகவும் சட்டமா அதிபராகவும் பழங்குடியினர் விவகார அமைச்சராகவும் பணியாற்றிய ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தற்பொழுது பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகள் அமைச்சராகப் பதவியேற்றார். (தொடர்ச்சி 18ம் பக்கம்)

UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025
உதயன் சர்வதேச விருது விழா 2025
Music - Dance - Awards Presentation - Dinner
இசை - நடனம் - விருதுவழங்கல் - இராப்போசன விருந்து
Date/Time: Saturday, June 14th, 2025 at 6:00pm
Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
அனுமதிச்சீட்டுக்களுக்கு: 416-732-1608 அல்லது 647-762-9512

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

கலைமாமணி டாக்டர்
## நித்யஸ்ரீ மகாதேவன்
வழங்கும்
## சங்கீத சங்கமம் 2025





ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்
## ஆறு திருமுருகன்
அவர்கள் வழங்கும் சிறப்புரை
## வேர்களைத் தேடுங்கள்

இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

அன்பளிப்பு VIP $100 $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

SUNDAY
JUNE 01 2025
@5:30PM

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

**விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# எம் மக்களைக் குண்டுகளால் கொன்று குவித்த "கொலையாளிகளை" "நடுங்க வைத்த" பிரம்ரன் நினைவுத்தூபி

இனவாதமும் அரச பயங்கரவாதமும் "தலை விரித்து ஆடிய இலங்கையில் பேரினவாதப் பேய்களிடமிருந்து விடுதலை பெறுவதற்காய் கைகளில் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழ்த் தேசிய உணர்வு மிக்க போராளி தங்களை பலப்படுத்திக் கொண்டிருந்த காலம் அது.

ஒரு பக்கத்தில் சிங்கள தேசியவாதத்தையும் பௌத்த பாராம்பரியத்தையும் பேசிக் கொண்டு. அருகில் புத்தர் சிலைகளையும் நிறுவியும் அவர்தம் போதனைகளையும் உச்சரித்த வண்ணமும் தமிழர் அழிப்பை மேற்கொண்டிருந்த ஆட்சியாளர்கள் கலங்கிப் போயிருந்தனர் அப்போது மறு பக்கத்தில் பாராளுமன்ற அரசியலிலும் பதவி மோகத்திலும் அதற்கு மேலான பொருளாசையும் கொண்ட தமிழ் அரசியல்வாதிகளின் நச்சரிப்பும் தடையாய்த் தெரிய போராளிக்கு குழுக்கள் தங்கள் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக அதிகம் போராட வேண்டியிருந்தது.

தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றிடுவோம் என்று தங்கள் கரங்களில் ஆயுதங்களை ஏந்தி நின்ற சில குழுக்கள் "சோரம்" போனதினால் உறுதியான போராட்டத்திற்கு பல தடைகள் இடையூறுகளை விளைவித்தன. "துரோகத்தனங்கள்" காட்டிக் "கொடுப்புக்கள்" ஆகியவை தாராளமாகவே முளைத்தன. இதனால் நற்பயிர்களுக்கு சேதங்கள் விளையத் தொடங்கின.

உலகின் எந்த நாட்டிலும் "இன விடுதலையோ" அன்றி "வர்க்க விடுதலையோ" அந்தந்த நாடுகளில் புரட்சிகளின் மூலம் நிகழ்ந்து விடக்கூடாது என்று எண்ணங்கொண்டிருந்த சர்வதேச அரச பயங்கரவாதிகள் ஒன்றாகக் கூட்டுச் சேர்ந்தனர். தங்களுக்குள் முரண்பட்டும் போரிட்டும் கொண்டிருந்த விசமம் நிறைந்த ஆட்சியாளர்களைக் கொண்டிருந்த தேசங்களின் இராணுவப் படைகள் ஒரே விமானங்களில் இலங்கைக்கு வந்து எமது தேசத்தின் விடுதலைக்காய் போராடிய உன்னதமான போராளிகளையும் அவர்களின் புனிதமான விடுதலை அமைப்பையும் நிர்மூலமாக்கியது மட்டுமல்லாது, நிராயுதபாணிகளாக நின்ற அப்பாவிப் பொதுமக்களையும் கொன்று குவித்தனர்.

இந்த இன அழிப்பிற்காக எமது புலம் பெயர் மக்களின் அமைப்புக்களும். பாதிக்கப்பட்டவர்களும் ஒன்றாக இணைந்து எமது மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்களைப் புரிந்த கொடியவர்களை தண்டிக்க முயன்றும் உலக வல்லரசுகளின் "குகை"யாக விளங்கிய ஐக்கிய நாடுகள் சபை கூட நியாயத்தை பெற்றுத் தர முன்வரவில்லை.

இவ்வாறான நிலையில் ஏங்கிக் கொண்டிருந்த எம் மக்களுக்காக. புனி பெய்யும் திருநாடாம் கனடாவில் திறந்த மனங்கொண்ட ஒரு அரசியல் தலைவர் தன் இதயத்தையும் திறந்து கொண்டதனால் இலங்கையில் எம் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை மேற்கொண்ட "கொலையாளிகளை" அச்சுறுத்தும் வகையில் நினைவுத்தூபி அமைக்கப்பெற்று அந்த இன அழிப்பின் அடையாளம் கடந்த சனிக்கிழமையன்று கனடாவின் பிரம்ரன் மாநகரில் திறந்து வைக்கப்பெற்றது. புலம் பெயர்ந்த எம் மக்களின் எழுச்சி கண்டும் தமிழரல்லாத ஒரு கனடிய அரசியல் தலைவனது தியாகம் கண்டும் எழுந்து நிற்கும் இனப்படுகொலைகளை ஞாபகப்படுத்து பிரம்ரன் மாநகர நினைவுத் தூபி.யானது, எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நடுங்கிக்கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ச என்னும் கொலையாளிகளின் தலைவனையும் அவனது புதல்வர்களையும் மேலும் நடுங்கச் செய்துள்ளது. இந்த கைங்கரியத்திற்கு காரணகர்த்தாவாக விளங்கும் பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் அவர்களை தலைசாய்த்து வணங்குவோமாக!






இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் 45வது விசேட இரத்ததான முகாம்!



10-05-2025 அன்று சனிக்கிழமை, விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்துடன் இணைந்து மாங்குளம் DASH - Delven Assistance for Social Harmony நடாத்திய மாபெரும் இரத்ததான முகாமானது மாங்குளம் - ஒலுமடு சந்திக்கு அருகாமையில் நடைபெற்றது.

சுமார் 75 கொடையாளர்கள் குருதி கொடையாளர்கள் இந்த இரத்ததான முகாமில் கலந்துகொண்டு குருதியை வழங்கினார்கள். இது விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் 45வது விசேட இரத்ததானமுகாம் ஆகும். விதையனைத்தும் விருப்பமே செயற்திட்டத்தின் மூலம் இதுவரை காலமும் 2227 குருதிக்கொடையாளர்கள் குருதியை வழங்கியுள்ளதாக அந்த செயற்திட்டத்தை நடாத்துவோர் தெரிவிக்கின்றனர்.





யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் S.சண்முகப்பிரியா, பொது சுகாதார பரிசோதகர் T. ரவீனதாஸ், பொது சுகாதார பரிசோதகர் J. சாரங்கன், தாதியர்கள் அச்சுதானந்தன், ஐங்கரன் ஆகியோர் இந்த குருதிச் சேகரிப்பில் கலந்து கொண்டனர்.



# நூலகத்தின் முக்கியத்துவத்தை யாழ்ப்பாண நூலக எரிப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம் என உணர்வுபூர்வமாகத் தெரிவித்த வட மாகாண ஆளுநர்!

நூலகம் ஒன்று எவ்வளவு தூரத்துக்கு முக்கியமானது என்பதை நாங்கள் யாழ்ப்பாண நூலக எரிப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். இன்று உங்கள் பாடசாலைக்கு நன்கொடையாக அமைத்து வழங்கப்பட்டுள்ள நூலகத்தை உரிய வகையில் பயன்படுத்தி உங்கள் கிராமத்துக்கும் - சமூகத்துக்கும் நற்பெயரைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என மாணவர்களிடம் கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள்.

தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட "மாணிக்கம் பூமணி ஞாபகார்த்த நூலகம் கடந்த செவ்வாய்க்கிழமையனறு (13.05.2025) திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ந.வில்லியம் சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் சிறப்பு விருந்தினராகவும், தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி நூலகத்தை நாடாவெட்டி திறந்து வைத்து நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்தார். இதன் பின்னர் மேடை நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. இதன்போது "நெய்தலின் ஊற்று" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், நூலகத்தை கட்டுவதற்கு அன்பளிப்புச் செய்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர். 2021ஆம் ஆண்டு நூலகத்துக்கான அடிக்கல் நடுகை செய்யப்பட்டு அண்ணளவாக ஒரு கோடியே 55 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு தனது பிரதம விருந்தினர் உரையில் ஆளுநர் தெரிவித்ததாவது, இந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் கட்டுமானங்கள் எல்லாம் சீர்குலைந்துபோனது. இடப்பெயர்வுடன் பலர் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர். அப்படிச் சென்றவர்கள் இன்று எமது கிராமமும், சமூகமும் முன்னேற வேண்டும் என்பதற்காக இத்தகைய அளப்பெரிய உதவியைச் செய்திருக்கின்றார்கள்.

நான் எல்லா இடங்களிலும் ஒரு விடயத்தை திரும்பத் திரும்பக் கூறிவருகின்றேன். தலைமைத்துவம் எங்கு சரியாக இருக்கின்றதோ அந்த நிறுவனம் உயர்வை நோக்கிச் செல்லும். இது அரசாங்க நிறுவனத்துக்கு மாத்திரமல்ல தனியார் நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

சில பாடசாலைகளின் அதிபர்கள் கணக்குகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையயுடன் நடந்துகொள்வதில்லை. அவ்வாறான அதிபர்களின் தலைமைத்துவக் குறைபாட்டால் அந்தப் பாடசாலைக்கு உதவிகளைச் செய்வதற்கு யாரும் முன்வருவதில்லை. அதனால் பாடசாலை பௌதீக ரீதியிலோ எந்தவொரு வகையிலுமோ வளர்ச்சியடைய முடியாத நிலைமை இருக்கின்றது. ஆனால் உங்கள் பாடசாலையின் அதிபர் மீது நம்பிக்கை வைத்து புலம்பெயர் சமூகம் பல உதவிகளைச் செய்திருக்கின்றது. இதைப் பயன்படுத்தி நீங்கள் முன்னேற வேண்டும்.

பாடசாலைக்கான வகுப்பறையின் தேவை உள்ளிட்ட சில விடயங்களை அதிபர் கோரியிருந்தார். உங்களின் கல்வித் தரம் உயர்வதற்கு எங்களாலான முயற்சிகளைச் செய்வோம். அடுத்த ஆண்டிலாவது உங்களின் கோரிக்கைளை நிறைவேற்றுவதற்கு நாம் நிச்சயம் முயற்சிப்போம், என்றார் ஆளுநர்.

மேடை நிகழ்வுகளைத் தொடர்ந்து பாடசாலையில் புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடமும் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# யாழ்ப்பாணம் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வுப் பணிகள் ஆரம்பம்!





யாழ்ப்பாணம், அரியாலை - செம்மணி சித்துபாத்தி மாயானத்தில், மனித எச்சங்கள் அவதானிக்கப்பட்ட பகுதிகளில் 15ம் திகதி வியாழக்கிழமை அன்று முதல் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செம்மணி - சித்துபாத்தி மயானத்தில், கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித என்பு எச்சங்கள் அவதானிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி சம்பவ இடத்தில் நீதவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

இதன்போது, மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கேன் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக வியாழன் அன்று அங்கு அகழ்வாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் இன்றைய அளவீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு, மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டன. தொடர்ந்து வரும் நாட்களில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

# யாழ்ப்பாணம் தாதிய கல்லூரியின் 65வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடைபயணம்!

யாழ்ப்பாணம். தாதிய கல்லூரியின் 65வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். தாதிய கல்லூரியும் யாழ். போதனா வைத்தியசாலையும் இணைந்து நடாத்திய தாதியர்களின் நலனை மேன்படுத்தும் நடைபயணம் 15ம் திகதி அன்று வியாழக்கிழமையன்று காலை 9.00 மணிக்கு யாழ். தாதிய கல்லூரியின் முன்றலில் ஆரம்பமாகியது.

இவ் நடைபயணமானது மணிக்கூட்டு கோபுர வீதியூடாக யாழ். பொதுநூலகம் வரை சென்று, அங்கிருந்து கண்டி பிரதான வீதியூடாக சென்று, பின்னர் முதலாம் குறுக்கு தெரு வீதியூடாக மீண்டும் யாழ். தாதிய கல்லூரி முன்றலில் வந்து நிறைவுபெற்றது.

இவ் நடைபயணத்தில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தி, தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், நிர்வாக துறையினர், தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட்டுக்கோட்டையில் மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு மறியல்!

மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் கடந்த 9ம் திகதி வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு மல் லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டை சித்தங்கேணிப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனமொன்றில் வகுப்புக்கு வருகைதரும் மாணவன் ஒருவர் “பட்டப் பெயர்” கூறி அழைத்ததாகத் தெரிவித்து மாணவரை ஆசிரியர் வகுப்புவேளையில் அடித்துத் தாக்கியுள்ளார்.

இந்தநிலையில் மாணவனின் பெற்றோர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது கைதுசெய்யப்பட்ட தனியார் கல்வி நிலைய ஆசிரியரை எதிர்வரும் 14நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



# வெசாக் தினத்தில் இலங்கையின் சிங்கள பௌத்தர்களுக்கு வடக்கு தமிழர்களிடருந்து ஒரு கோரிக்கை

வடக்கில் தமிழ் மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக கையகப்படுத்தி, இராணுவத்தின் ஆதரவுடன் விகாரை அமைக்கப்பட்ட காணிகளை அதன் உரிமையாளர்களிடம் மீளத் தர சிங்கள பௌத்த மக்கள் முன்வர வேண்டும் என தமிழ் அரசியல் ஆர்வலர் ஒருவர் அழைப்பு விடுத்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களால் புத்தரின் பிறந்தநாளை நினைவுகூரும் வெசாக் போயா தினத்தன்று, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, தையிட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு அருகில் போராட்டத்திற்கு தலைமை வகித்த, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் (TNPF) சட்ட ஆலோசகர் நடராஜர் காண்டீபன் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

“சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக சிங்கள மக்களும் கிளர்ந்து எழுந்து புத்த பகவானுடைய போதனைகளை முன்னிறுத்தி இந்த போராட்டத்திற்கு உதவ வேண்டுமென நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம். புத்த பெருமான் அன்பை போதித்தவர். அடக்குமுறைகளுக்கு எதிரானவர். அமைதியை போதித்தவர் என்ற அடிப்படையில் இந்த அப்பாவி மக்களுடைய காணிகள் கட்டமைப்பு சார் இனப்படுகொலையாக, சிங்கள பௌத்த பேரினவாதம், குறிப்பாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கட்டப்பட்டு நடத்தப்படும் விகாரை என்றுதான் அங்கு பெயர்ப்பலகை காணப்படுகிறது, இந்த ஆக்கிரமிப்பை தொடர்ந்து மேற்கொள்வதை சிங்கள மக்கள் தடுத்து நிறுத்த வேண்டும்.”

காங்கேசன்துறை தையிட்டி கிராமத்தில் திஸ்ஸ விகாரைக்காக இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தை விடுவிக்கக் கோரி நீண்டகாலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் மக்கள், மார்ச் 20, 2025 அன்று கொழும்பில் ஒரு ஊடக சந்திப்பை நடத்தி, நிலத்தின் மீதான தங்கள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும், நில அபகரிப்புக்கான நம்பகமான ஆதாரங்களையும் சமர்ப்பித்தனர்.

திஸ்ஸ விகாரைக்காக இராணுவம் பலவந்தமாக காணிகளை கையகப்படுத்தியதன் பின்னணியை கொழும்பில் சிங்கள மொழியில் விளக்கிய பத்மநாதன் சாருஜன், யுத்தம் காரணமாக தையிட்டி பிரதேசத்தை விட்டு கிராம மக்கள் 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பகுதிக்கு சென்றதாக குறிப்பிட்டார்.

வடக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான்கு பௌத்த நிகாயக்கள் மற்றும் மகா சங்கத்தினரிடம் முன்வைக்க நடவடிக்கை எடுக்குமாறு சிங்கள பௌத்த மக்களிடம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் நடராஜர் காண்டீபன் மே 12 அன்று மேலும் கேட்டுக்கொண்டார்.

“இந்த புனிதமான, தானம் வழங்குகின்ற நாளிலே எங்களுடைய காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை, மகா சங்கத்தினரிடமும், அஸ்கிரிய, மல்வத்து, அமரபு, ராமாஞ்ச ஆகிய நிக்காயக்களிடமும் இந்த கோரிக்கையை முன்வைக்க வேண்டுமென கோருகின்றோம். இந்த நிலங்களை ஆக்கிரமித்திருப்பது பௌத்த தர்மத்திற்கு முரணானது, தேரவாத பௌத்தத்திற்கு முரணானது என நீங்கள் உங்கள் ஜனாதிபதிக்கு சொல்லுங்கள்.”

ஏப்ரல் 26, 2025 அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழ் மக்களின் நிலங்களிலிருந்து “விடுவிக்கக்கூடிய” ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீள கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களால் உரிமை கோரப்படும் நிலங்களை கையகப்படுத்துவது மற்றும் விகாரைகளை அமைப்பது குறித்து ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை இன்றுவரை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை.

காங்கேசன்துறையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க திஸ்ஸ விகாரையில் புனரமைக்கப்பட்ட ஸ்தூபி வைக்கும் பணி 27 ஏப்ரல் 2023 அன்று இடம்பெற்றது.” என இலங்கை இராணுவம் ஏப்ரல் 29ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ இணையதளத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

“கி.பி. 3ஆம் நூற்றாண்டில் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் இந்த விகாரை அமைக்கப்பட்டது.” என இலங்கை இராணுவம் தெரிவிக்கின்றது.

2023 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் விகாரை அருகே தங்கள் நிலங்களை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தி வரும் தமிழர்கள், திஸ்ஸ விகாரையை அமைப்பதற்காக 14 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 100 பரப்பு (6.2 ஏக்கர்) நிலத்தை இராணுவம் வலுக்கட்டாயமாக கையகப்படுத்தியதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

விகாரையை நிர்மாணிப்பதற்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# பிரித்தானியாவின் குடிவரவுக் கொள்கைகளில் பாரிய திருப்புமுனை:

இலங்கை செய்திகள் Sri Lanka News




## எல்லைகளை மீண்டும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முடுக்கிவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள பிரதமர் கியர் ஸ்டார்மர்

பிரித்தானியாவில் தற்போது எரியும் பிரச்சனையாக உள்ள அரசியல் அழுத்தங்களுக்கு இடையே ஒரு குடிவரவுக் கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டு வர புதிய அரசு தீர்மானித்துள்ளதாக அறியப்படுகின்றது.

கடந்த மே 12 ஆம் தேதி, பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் சமீபத்திய வரலாற்றில் மிக முக்கியமான குடியேற்ற சீர்திருத்தத்தை அறிவித்தார். நைஜல் ஃபரேஜின் தலைமையில் "ரிபார்ம் யூகே" கட்சி வளர்ந்து வரும் பின்னணியில், ஸ்டார்மரின் அறிவிப்பானது "எங்கள் எல்லைகளை மீண்டும் கட்டுப்பாட்டில் கொண்டுவர" நோக்கமாகக் கொண்டுள்ளது, இது லேபர் கட்சியின் முந்தைய நிலைப்பாடுகளிலிருந்து ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த திருப்பத்தைக் குறிக்கிறது. வெளியிடப்பட்ட வெள்ளை ஆவணம், குடியேற்ற விதிகளை கடுமையாக்குவதற்கான முன்மொழிவுகளைக் கொண்டுள்ளது, இது பிரிட்டனின் மக்கள் தொகை, பொருளாதாரம் மற்றும் அரசியல் விவகாரங்களில் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பானது பிரித்தானியாவில் அகதி நிலைக் கோரிக்கைகளை சமர்ப்பித்து காத்திருக்கும் வெளிநாட்டவர்களுக்கு மிகுந்த மனக் கஸ்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

### முக்கிய மாற்றங்களான வெள்ளை ஆவணத்தை உற்று நோக்குவோம்

ஸ்டார்மரின் குடியேற்ற வெள்ளை ஆவணத்தில் பல கடுமையான நடவடிக்கைகள் அடங்கும்:

- இந்த வெள்ளை ஆவணத்தின்படி. நிரந்தர குடியுரிமை தேவையை நீட்டித்தல்: நிரந்தர குடியுரிமை மற்றும் குடியுரிமைக்கான தகுதி 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாக நீடிக்கப்படும். இது ஆயிரக்கணக்கான குடியேறிகளின் ஒருங்கிணைப்பு செயல்முறையை தாமதப்படுத்தக்கூடிய ஒரு பெரிய கொள்கை மாற்றமாகும்.

- திறமையான தொழிலாளர் விசா தடைகள்: இப்போது பட்டங்களைப் பெற்ற தகுதி உள்ளவர்கள் மட்டுமே திறமையான தொழிலாளர் விசாவிற்கு தகுதியுடையவர்களாக இருப்பார்கள். இந்த நடவடிக்கை குறைந்த கல்வி கற்ற ஆனால் அவசியமான வெளிநாட்டு தொழிலாளர்களை விலக்களிக்கப்படலாம்.

- வெளிநாட்டு பராமரிப்பு பணியாளர் நியமனத் தடை: மிகவும் சர்ச்சைக்குரிய அம்சம், வெளிநாட்டிலிருந்து பராமரிப்பு பணியாளர்களை நியமிப்பதற்கான முழுமையான தடை-ஏற்கனவே பணியாளர் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் ஒரு நாடாக பிரித்தானியா உள்ளது குறிப்பிடத்தக்கது.

- ஆங்கில மொழி தேவைகளை கடுமையாக்குதல்: முதன்மை விசா பெறுபவர்களுடன் வரும் அனைத்து வயது சார்புடையவர்களும் இப்போது கடுமையான ஆங்கில திறன் நிலைகளை பூர்த்தி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கை ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும் என்றும் பிரித்தானியாவின் பிரதமர் ஸ்டார்மர் கூறுகிறார்.

இந்த நடவடிக்கைகள் சமூக நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கும், தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் ஒரு வழியாக கட்டமைக்கப்பட்டுள்ளது, குறிப்பாக அதிக குடியேற்றத்தைப் பற்றி கவலை தெரிவித்துள்ள தொழிலாளர் வர்க்க சமூகங்களில். மாற்றங்களை ஏற்படுத்தும்.

### அரசியல் நோக்கம்: ரிபார்ம் யூகே - என்னும் புதிய குடிவரவுச் சட்டம் தொடர்பான விடயங்களில் பதிலளித்தல்

பிரித்தானியாவின் தொழிற்கட்சியின் கொள்கை ரிபார்ம் யூகே - அறிவிப்பினால் அதிகரித்து வரும் ஆதரவிற்கு நேரடியான எதிரொலியாக தெரிகிறது. நைஜல் ஃபரேஜின் கட்சி குடியேற்றம், தேசிய அடையாளம் மற்றும் வளங்களின் அழுத்தம் குறித்த கவலைகளை பயன்படுத்தி வருகிறது. முன்பு தொழிசார்புடைய தொகுதிகளில் ரிபார்ம் யூகே அதிக வாக்குகளைப் பெறுவதால், ஸ்டார்மரின் அரசாங்கம் ஃபரேஜின் ஈர்ப்பைக் குறைக்க முயற்சிக்கிறது.

இந்த மாற்றம் தொழிற்கட்சிக்குள் ஒரு உள் மாற்றத்தையும் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது-தாராள குடியேற்ற கொள்கைகளை ஆதரித்த ஒரு கட்சியிலிருந்து, இப்போது கட்டுப்படுத்தப்பட்ட எல்லைகள், ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய நலன் என்ற மொழியை பேசும் ஒரு கட்சியாக மாறியுள்ளது. அத்துடன் புதிய குடிவரவாளர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் தொழிற் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகளை தோற்றுவிக்கலாம்.

### பொருளாதார பின்விளைவுகள்: வணிகம் மற்றும் துறை சார்ந்த எதிர்வினைகள்

அரசியல் காரணங்கள் தெளிவாக இருந்தாலும், இந்த மாற்றங்களின் பொருளாதார விளைவுகள் கடுமையானதாக இருக்கலாம்: என எதிர்பார்க்கப்படுகின்றது

- பராமரிப்புத் துறை நெருக்கடி:
வெளிநாட்டு பணியாளர்களை பெரிதும் சார்ந்துள்ள முதியோர் பராமரிப்புத் துறை கடுமையான பாதிப்புக்கு உள்ளாகலாம். வெளிநாட்டவர்களை நியமிப்பதற்கான தடை ஏற்கனவே உள்ள பணியாளர் பற்றாக்குறையை மேலும் ஆழப்படுத்தும். சில பகுதிகளில் முதியோர் பராமரிப்பு சேவைகள் மூடப்படுவதற்கான ஆபத்தும் உள்ளது.

- பிற துறைகளில் திறன் பற்றாக்குறை:
பட்டதாரிகளுக்கு மட்டுமே திறமையான தொழிலாளர் விசா வழங்கும் கொள்கை, விருந்தோம்பல், கட்டுமானம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் பிரச்சினைகளை உருவாக்கலாம். இத்துறைகள் பட்டதாரி அல்லாத ஆனால் திறமையான தொழிலாளர்களை நம்பியுள்ளன.என்பதும் அவர்களது தேவை உள்ளதை மறுக்கவும் முடியாது.

- வணிகத் துறையின் எதிர்ப்பு:
பெரிய வணிகத் தலைவர்கள் மற்றும் தொழில் சங்கங்கள் இந்த மாற்றங்கள் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கலாம், தொழிலாளர் செலவுகளை அதிகரிக்கலாம் மற்றும் பணவீக்கத்தை மோசமாக்கலாம் என்று எச்சரித்துள்ளனர்.

### ஒருங்கிணைப்பா அல்லது தள்ளிவைப்பா? சமூக விளைவுகள்

தொழிற்கட்சியின் பிரதமர் ஸ்டார்மரின் ஒருங்கிணைப்பு மற்றும் ஆங்கில மொழி திறன் குறித்த கடுமையான நிபந்தனைகள், மேற்கத்திய நாடுகளில் குடியேற்றக் கொள்கைகளில் ஒரு போக்கை பிரதிபலிக்கின்றன "கலாச்சார பொருத்தம்" உள்ளவர்களுக்கே வாய்ப்பு வழங்குவது. என்பது எவ்வகையான பிரச்சனைகளை கொண்டு வரும் என்பதை காத்திருந்தே அறியலாம்.

- நேர்மறை விளைவுகள்:
அங்கில மொழி திறன் பிரித்தானியாவில் மேம்படுத்தப்பட்டால், சமூக ஒற்றுமை மேம்படலாம். எனவும் கருதப்படுகின்றது

- எதிர்மறை விளைவுகள்:
இந்தக் கொள்கைகள் குறிப்பாக பெண்கள் மற்றும் வயதானோரை பாதிக்கலாம். உதாரணமாக, மத்திய கிழக்கு அல்லது ஆசிய நாடுகளில் இருந்து வரும் குடும்பங்களின் பெண்கள் மொழி தேர்வுகளில் தோல்வியுற்றால், அவர்களின் குடியேற்றம் தடுக்கப்படும்.

மேலும், குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்தப்பட வேண்டிய சவால் என்று கருதுவதன் மூலம், ஏற்கனவே பாகுபாட்டை எதிர்கொள்ளும் சமூகங்கள் மேலும் புறக்கணிக்கப்படும் அபாயம் உள்ளது.




### சமநிலை கொள்கையா அல்லது பின்னோக்கி பின்வாங்குதலா?

தொழிற் கட்சி ஆதரவாளர்களின் கருத்து:
இந்த சீர்திருத்தங்கள் குடியேற்றம் குறித்த யதார்த்தமான விவாதத்தைத் தூண்டுகின்றன.
குடியேற்றவாசிகள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படுவர், வீடுகள், பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் அழுத்தம் குறையும்.

விமர்சகர்களின் கருத்து:
பிரதமர் ஸ்டார்மர் ஃபரேஜ்-பாணியான பிரபல்யம் அடைவதை நம்புகின்றார் என்று விமர்சகர்கள்குற்றம் சாட்டுகின்றனர். வேறு நாடுகளிலிருந்து தப்பியோடி வருபவர்களுக்கான ஆதரவு குழுக்கள், இது பிரிட்டனின் "வரவேற்பு நாடு" என்ற கணிப்பை சேதப்படுத்துகிறது என்று கூறுகின்றன.

### பிரிட்டன் வழி மாற்றத்தில்

பிரதமர் கியர் ஸ்டார்மரின் குடியேற்ற சீர்திருத்தங்கள் ஒரு துணிச்சலான, சர்ச்சைக்குரிய பந்தயம்.

அரசியல் நோக்கம்:
வரவிருக்கும் தேர்தலுக்கு முன், ரிபார்ம் யூகே-ன் வளர்ச்சியை சமநிலைப்படுத்த.

எதிர்நோக்கும் ஆபத்துகள்:
பிரித்தானியாவில் பொருளாதார நிலைத்தன்மைக்கு பங்கம், மற்றும் சமூக பிளவு. ஆகியவை ஏற்படலாம்.

இறுதியாக, கட்டுப்பாட்டை திறந்தநிலைக்கு முன்னால் வைப்பதன் மூலம், பிரிட்டன் தனது தேசிய அடையாளத்தை மீண்டும் வரையறுக்கிறது. இதை பிரித்தானியர்கள் பலர் வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

"ஈழத்து நிலவன்" (12-05-2025)



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள260 ஏக்கர் கடல் அட்டைப் பண்ணைகளில் 51 ஏக்கர் பண்ணைகள் அனுமதி இன்றி இயங்குவது கண்டுகொள்ளப்பட்டுள்ளது

- ந.லோகதயாளன்

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் 260 ஏக்கர் கடல் அட்டைப் பண்ணைகளில் 51 ஏக்கர் கடல் அட்டைப் பண்ணைகள் அனுமதி இன்றி இயங்குவது கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் தற்போது 1080 ஏக்கர் பரப்பளவில் கடல் அட்டைப் பண்ணைகள் இயங்குகின்றன என அரச திணைக்களம் உத்தியோகபூர்வமாக கூறினாலும் அனுமதியின்றியும் பல பண்ணைகள் இயங்குகின்றன. வடக்கில் இயங்கும் கடல் அட்டைப் பண்ணைகளிற்காக வருடாந்தம் சுமார் 45 லட்சம் கடல் அட்டை குஞ்சுகள் தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

45 லட்சம் குஞ்சுகளையும. உற்பத்தி செய்ய 3 உற்பத்திப் பண்ணைகள் அல்லைப்பிட்டி, நாவந்துறை, மன்னார் திணைக்களம் ஆகிய இடங்களில் இயங்குவதோடு புதிதாக அல்லைப்பிட்டியில் 4 வது பண்ணையும் அமைக்கப்படுகின்றது. இவை ஒவ்வொன்றிரும் மாதாந்தம் 40 ஆயிரம் குஞ்சுகள் உற்பத்தி செய்ய முடியும். வடக்கில் உள்ள 1080 ஏக்கர் கடல் அட்டைப் பண்ணைகளும் முழுமையாக செயல்படுவதானால் குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் குறைந்தது 6 பண்ணைகள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் இயங்கும் தனியார் பண்ணையில் 2024 ஆம் ஆண்டு 3 லட்சத்து 80 ஆயிரம் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கர் பண்ணைக்கு வருடம்தோறும் 4 ஆயிரம் குஞ்சுள் வேண்டும். தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 680 பண்ணைகளும், கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைதீவில் 88, நாச்சிக்குடாவில் 67, கிராஞ்சியில் 54 பண்ணைகளும் சட்டபூர்வ அனுமதியோடு இயங்குகின்றது. அனுமதிகள் இன்றி மேலதிகமாக 51 ஏக்கர் என மொத்தம் 260 பண்ணைகள் உள்ளது. இவ்வாறே மன்னார் மாவட்டத்திலும் 130 ஏக்கர் பண்ணைகள் உள்ளது.

கிளிநொச்சியில் அத்துமீறி ஓர் ஆண்டாக அமைக்கப்பட்டுள்ள கடல் அட்டைப் பண்ணைகள் தொடர்பில் சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுப்பதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், நெக்டா மற்றெம் பிரதேச செயலகம் என்பவற்றிற்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு அதிகாரம்கொண்ட நிறுவனங்களில் பிரதேச செயலகங்கள் முதலில் எழுத்தில் அறிவித்து அதன் பின்பு எச்சரிக்கை அறிவித்தல் காட்சிப் படுத்திய பின்பே வழக்கிட முடியும் எனவும், கரையோரப் பாதுகாப்பு நிறுவனம் நேரடியாக வழக்குத் தாக்கல் செய்யவும் நெக்டா நிறுவனமானது எந்தவொரு அறிவித்தலோ அல்லது சட்ட நடவடிக்கை இன்றி அனைத்தையும் எந்தவேளையும. அகற்றும் அதிகாரம்கொண்டபோதும் அனைவரும் மௌனம் காப்பதாக உள்ளூர் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

உள்ளூர் மீனவர்களின் குற்றச் சாட்டுத் தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் அகிலனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 52 பேர் அனுமதி இன்றி கடல் அட்டைப் பண்ணை அமைத்துள்ளதாக அடையாளம் காணப்பட்டு அதில் 49 பேருக்கு எதிராக முன் அறிவித்தல் படிவம் (அ படிவம்) விநியோகிக்கப்பட்டு அறிவித்தரும் ஒட்டப்பட்டுவிட்டது. இவர்களிற்கு எதிராக யூன் மாதத்திற்கு முன்பு வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

இதேநேரம் முழு அதிகாரம்கொண்ட நெக்டா நிறுவனம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என அதன் யாழ்ப்பாணம் இணைப்பாளர் நிருபராஜ்சை தொடர்புகொண்டு கேட்டபோது,

நாமும் சகல விபரங்களையும் சேகரித்து உரிமையாளர்களையும் இனம் கண்டுகொண்டோம் அடுத்த மாதம் நேரடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இது தொடர்பில் கடல் அட்டைப் பண்ணை தொடர்பில் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வரும் வடமாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதி அன்னராசாவைத் தொடர்புகொண்டு கேட்டபோது,

இரண்டு ஆண்டுகளாக சட்ட விரோதமாக அரசிற்கு சேரவேண்டிய குத்தகைப் பணத்தைக்கூட செலுத்தாமல் இயங்கும்போது தூங்கிய அதிகாரிகள் அவர்கள் போட்ட கடல் அட்டைப் பண்ணைகளின் அட்டை வளர்ச்சி அடைந்து சந்தைப்படுத்தி இலாபமீட்டிய பின்பு ஒப்புக்கு நடவடிக்கை எடுக்கின்றனர் என்றார்.

# யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை ஆசிரியர் ஒருவரின் வெறித்தன தாக்குதல் – பலர் காயம்!

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர்கள் மீது அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தாக்கியதில் 5க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, குறித்த பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆண் ஆசிரியர், வகுப்பு ஒன்றிற்கு சென்று சத்தம் எழுப்பிய மாணவர்கள் யார் என கேள்வி கேட்டபோது மாணவர்கள் பதில் வழங்காத நிலையில் மாணவர்கள் மீது கதிரையால் மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோது ஆசிரியர் மாணவர்கள் மீது தாக்கியது உண்மை எனவும் ஆனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படவில்லை என தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பாடசாலை என்ற வகையில் நிர்வாக ரீதியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தாம் எடுக்க உள்ளதாக தெரி.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் புற்றுநோயின் தாக்கம் தாங்க முடியாத முதியவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

13ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம், யாழ்ப்பாணத்தில் புற்றுநோயின் வேதனை தாங்கமுடியாமல் முதியவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். இதன்போது உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைச் சேர்ந்த கனகரத்தினம் லோகநாதன் (வயது 72) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த முதியவர் கடந்த மூன்று ஆண்டுகளாக புற்றுநோயால் அவஸ்தைபட்டுள்ளார். இந்நிலையில் நோயின் வீரியம் தாங்க முடியாமல் நேற்றையதினம் காலை தவறான முடிவெடுத்து மண்ணெண்ணெய் அருந்தியுள்ளார்.

பின்னர் உறவினர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# நல்லூருக்கு கந்தன் ஆலயத்திற்க அண்மையில் உள்ள அசைவ உணவகத்துக்கு தடை விதிக்குமாறு கோரி ஆணையாளருக்கு கடிதம்!



யாழ்ப்பாணம், நல்லூர் ஆலயத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்துக்கு தடை விதிக்குமாறு கோரி யாழ். மாநகர சபையின் ஆணையாளருக்கு, தமிழ்த்தேசிய மககள் முன்னணியின் 4ம் வட்டார உறுப்பினர் சந்திரசேகரம் இராஜகுமார் மற்றும் கட்சி உறுப்பினர்களால் ஆட்சேபனைக் கடிதம் ஒன்று வழங்கப்பட்டது.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நல்லூர் ஆலயத்தின் சூழமைவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாமிச உணவகம், சைவ மக்களின் மனங்களுக்கும், ஆன்மீக உளவியலுக்கும் மதிப்பளிக்காமல் நடத்தப்படுவது குறித்து மக்கள் எமக்கு முறையிட்டு வருகின்றார்கள்.

சைவ மக்களின் ஆன்மீக உளவியலுக்கு இடையூறை ஏற்படுத்தும் குறித்த மாமிச உணவகத்தில் மாமிச உணவு தயாரிக்கும் செயற்பாடுகளுக்கு முற்றாகத் தடை விதிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.




# தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் ஊர்திப்பவனி



தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக புதன்கிழமை 14ம்திகதி காலை ஊர்திப்பவனியொன்று ஆரம்பமாகியது.

குறித்த ஊர்திப்பவனியானது 15ம்திகதி அன்று கிளிநொச்சியை சென்றடைந்தது. இதன்போது பரந்தன், கிளிநொச்சி நகர் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.





முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில் இந்த ஊர்திப்பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊர்திபவனி வடக்கை சேர்ந்த ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது.

"தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும், தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் மற்றும் இறுதி போரின் சாட்சியங்கள் என்பன வாகனத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

# 19வது ஆண்டில் மேடையில் நாம் பார்த்து பரவசமடைந்த ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் "சிவத்தமிழ் விழா"!

## முத்தமிழும் பக்தியும் கலந்து மாணவரின் ஆற்றலை வெளிக்காட்டியும் முத்திரை பதித்த பெருவிழா!

ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த் தானமும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வரசித்தி இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்திய கடந்த சனிக்கிழமை 10ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடத்திய "சிவத்தமிழ்" விழாவிற்கு நூற்றுக்கணக்கானவர் கலந்து சிறப்பித்தமை போற்றுதற்குரியதாகும். மாணவ மாணவிகள்- அவர்தம் பெற்றோர்கள்- ஆலயத்தின் பக்தர்கள் மற்றும் தொண்டர்கள்- சிறப்பு விருந்தினர்கள் என பலதரப்பினரும் பொறுமையாக அமர்ந்திருந்து மாணவச் செல்வங்களின் பன்முக கலை ஆற்றலையும் அவர்கள் கற்ற மொழி மற்றும் சமயம் சார்ந்த விடயங்களை எவ்வாறு கிரகித்துக் கொண்டார்கள் என்பதை நேற்றைய மேடையில் சமர்ப்பித்த விதமும் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் வியப்பையும் விருப்பத்தையும் ஏற்படுத்தின என்பது உண்மையான பதிவாகும். இந்த விழாவை வெற்றிகரமாகவும் பக்தியால் உருகும் பக்குவத்தோடும் நடத்தி முத்திரை பதித்த பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் மற்றும் அவரது பாரியார் இந்துக்கல்லூரி நிர்வாகி ஜெயா ஐயா அவர்கள் மற்றும் வரசித்தி இந்துக் கல்லூரியின்









அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்- படங்களும் செய்தியும் "உதயன்" சத்தியன்



உங்கள் பதிவுகளை முன்கூட்டியே Blood.ca எனும் இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள். முன் பதிவை மேற்கொள்ளாது அன்றைய தினம் இரத்ததானம் கொடுப்பது வீண் நேரவிரயத்தைக் கொடுப்பதோடு சந்தர்ப்பம் அற்றும் போகலாம் ஏனெனில் குறிப்பிட்ட நேரமே எமக்கு ஒதுக்கப்பட்டுள்ளது நன்றி

# "இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நிகழவில்லை என்று கூறுபவர்கள் கனடாவில் எவரும் இருந்தால், நீங்கள் கொழும்பிற்கு திரும்பிச் செல்லுங்கள்"




## பிரம்ரன் மாநகரில் "முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை ஞாபகார்த்த நினைவுத் தூபியை திறந்து வைத்து ஆற்றிய உணர்வுபூர்வமான உரையில் நகரபிதா பெற்றிக் பிரவுண் அழுத்தமாகத் தெரிவிப்பு

(பிரம்ரன் மாநகரிலிருந்து ஆர்.என்.லோகேந்திரலிங்கம்)

"இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவமும் ராஜபக்ச என்னும் கொடிய கொலையாளியின் சகாக்களும் இணைந்து நடத்திய இனப்படுகொலையினால் 2009ம் ஆண்டு இலட்சக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப் பட்டதற்கு இலட்சக் கணக்கான ஆதாரங்களும் சாட்சியங்களும் உள்ளன. இவ்வாறிருக்கையில் இனப்படுகொலை நிகழவில்லை என்று கூறுபவர்களும் உள்ளார்கள். இந்த நினைவுத்தூபியை இங்கு நிறுவக்கூடாது என்பதில் அந்தக் குழுவினர் தங்களால் இயன்ற அளவிற்கு முயன்றார்கள். ஆனால் பிரம்ரன் வாழ் தமிழ் மக்களும் தமிழ்க் கனேடியர்களும் இங்குள்ள அரசியல்வாதிகளும் ஒன்றாரியோ மாகாண முதல்வரும் அவரது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் லோகன் கணபதி மற்றும் விஜேய் தணிகாசலம் ஆகிய தமிழ் பேசும் அரசியல் தலைவர்களும் எமக்கு பக்க பலமாக இருந்தார்கள். எனவே இவ்வாறான மகா பொய்யர்கள் தோற்றுப் போனார்கள். ஆனால் எமது முயற்சியினால் இந்த நினைவுத் தூபி சோகத்திலும் கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. நான் இறுதியாகவும் உறுதியாகவும் ஒன்றைக் கூறுகின்றேன். அந்தப் பொய்யர்கள் கருதுவது போல, இலங்கையில் இனப்படுகொலைகள் நிகழவில்லை என்று கூறுபவர்கள் கனடாவில் எவரும் இருந்தால், அவர்கள் அனைவரும் கொழும்பிற்கு திரும்பிச் செல்லட்டும்".

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று 10ம் திகதி பிரம்ரன் மாநகரில் மக்களால் அறியப்பெற்ற சிங்க்கூசி பூங்காவில் அமைக்கப்பெற்றுள்ள "முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை ஞாபகார்த்த நினைவுத் தூபியை திறந்து வைத்து ஆற்றிய உணர்வுபூர்வமான உரையில் நகரபிதா பெற்றிக் பிரவுண் அழுத்தமாகத் தெரிவித்தார்.

சுமார் 5000 பார்வையாளர் உணர்வுடன் கலந்து கொண்ட அன்றைய நினைவுத்தூபி திறப்பு விழாவில் தமிழ்த்தேசிய அரசியல் நோக்கம் கொண்ட அமைப்புக்கள் பலவற்றின் செயற்பாட்டாளர்கள் அனைவரும் இணைந்து நற்காரியம் ஒன்றை நிறைவேற்றினார்கள் என்றால் அது மிகையாகாது.

அன்றையதினம் ஒன்றாரியோ மாகாணத்தின் அமைசசர்கள் பலரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மத்திய அரசாங்கத்தின் லிபரல் கட்சியின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்கள் ஆதரவையும் பலத்தையும் நிரூபித்துச் சென்றார்கள் என்றால் அது மிகையாகாது.

இது இவ்வாறிருக்க, பிரம்ரன் மாநகரில் "முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை ஞாபகார்த்த நினைவுத் தூபியை திறந்து வைத்த நாளிலிருந்து இலங்கையில் அனைத்து தரப்பினரும் கடும் எதிர்ப்பினைக் காட்டி வருகின்றார்கள். ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சரும் கனடா அரசாங்கத்திற்கு தனது அதிருப்த்தியை பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் மூலம் தெரிவித்துள்ளார்.

இதைப் போன்று மகிந்த ராஜபக்சாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவரும் தங்கள் எதிர்ப்புக்களை பல வழிகளில் காட்டிவருகின்றனர்.

அவற்றிக்கு பதில் அளிக்கும் வகையிலும் எமது பிரம்ரன் மாநகர மேயர் பற்றிக் பிரவுண் அவர்கள் தனது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றார்.

தனது பல பதிவுகளில் அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பம் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்ததாக நாமல் ராஜபக்ஸவுக்கு பிரம்டன் முதல்வர் உடனுக்குடன் பதில்களை பதிவு செய்து வருகின்றார்.

"இனப்படுகொலை நினைவுத்தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்கு கிடைத்த கௌரவமாகும்..!

கனடாவில் உருவாக் கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்கு கிடைத்த கௌரவமாகும் எனவும் கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபிக்கான நாமல் ராஜபக்சவின் எதிர்ப்பு, அந்த குடும்பத்தின் கரங்களில் அப்பாவிகள் கொல்லப்பட்டதை அங்கீகரிக்கும் சரியான பாதையில் நாம் சென்றுகொண்டிருக்கின்றோம் என்பதற்கான உறுதியான சமிக்ஞை.





ராஜபக்ச குடும்பம் இனப்படுகொலை இடம்பெறவில்லை என உறுதியான நம்பிக்கைகொண்டிருந்தால் நீதியை குழப்புவதற்கான நடவடிக்கைகள், வழக்கு விசாரணையிலிருந்து மறைந்திருத்தல் போன்றவற்றை கைவிட்டுவிட்டு சர்வதேச விசாரணைகளிற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த குடும்பம் பொறுப்புக்கூறலை எதிர்கொள்வதற்கு பதில், இலங்கை அரசால் பாதுகாக்கப்பட்ட நிலையில், ஆடம்பரத்தில் மறைந்துள்ளது. இது வெட்கக்கேடான விடயம் எனவும் பிரம்டன் மேயர் அழுத்திச் சொல்லியுள்ளார்.

ராஜபக்ச குடும்பம் இழைத்துள்ள மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போல்பொட், ஸ்லோபடான் மிலோசோவிக், ஹென்றிச் ஹிம்லர், மற்றும் புளிசியான் கபுகா ஆகியோர் இழைத்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுடன் போட்டியிடும் அளவிற்கும் மோசமானவை.


கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை ராஜபக்ச குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்கு கிடைத்த கௌரவமாகும் எனவும் பிரம்டன் மேயர் தனது பதிவில் நாமல் ராஜபக்க்சவுக்கு பதிலடி கொடுத்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.











இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர்களின் நில இருப்பை உறுதிபடுத்த சர்வதேச சமூகம் தலையிட வேண்டும்
## பிரித்தானிய, கனடிய, அரச பிரதிநிதிகளிடம் தமிழ் தேசிய பேரவை கோரி வலிறுத்தல்

கனகராசா சரவணன்



குருந்தூர்மலையில் பௌத்த தேரர் மற்றும் தொல்பொருட் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள தனியார் காணிகளில் சொந்த நிலத்தில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்டஇரண்டு விவசாயிகள் கைது, தையிட்டி சட்டவிரோத விகாரை அகற்றப்பட்டு காணிகள் உரிமையாளர்களிடம் கையளித்தல் வடக்கில் தமிழர்களின் நில இருப்பை உறுதிபடுத்த சர்வதேச சமூகம் அவசர தலையி வேண்டும் என கோரி தமிழ் தேசிய பேரவையினர் பிரித்தானிய, இந்தியா, கனடா, ஜக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதிகளிடம் வலிறுத்தியுள்ளதாக தமிழ் தேசிய பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பொன்னம்பலம். கஜேந்திரகுமார்.

தமிழ் தேசிய பேரவையினருக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பற்றிக்கையும் இந்திய துணைத்தூதுவர் கலாநிதி பாண்டே யுடன் மற்றும் ஜக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதி மகான்ரே பிறஞ்சேயுடன், கனேடிய உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அந்தந்த துதுவராலயங்களில் கடந்த 14ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுது.

இதில் தமிழ் தேசிய பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வாராசா கஜேந்திரன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ ஐங்கரநேசன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த உயர்ஸ்தானிகளுடனான சந்திப்பின் பின்னர் பொ.ஜேந்திரகுமார் ஊடக அறிக்கை ஒன்றை புதன்கிழமை வெளியிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் பொழுது கடந்த 2025 மார்ச் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட வடமாகாணத்தின் வவுனியா தவிரந்த நான்கு மாவடங்களில் சுமார் 6000 ஏக்கர் காணியை அரச காணியாக சுவீகரிக்கும் அரசின் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக நாம் எமது ஆட்சேபனைகளை தெரிவித்திருந்தோம். மூன்று மாத காலத்தில் மக்கள் தமது காணிகளுக்கான ஆவணங்களை சமர்ப்பித்து உரித்தை உறுதிபடுத்த வேண்டும் என்ற அந்த நிலைப்பாட்டினை அரசு மீள பெறவேண்டும் என வலியுறுத்தினோம்.

வட கிழக்கு மக்கள் யுத்தகாலத்தில் பலதடவைகள் இடம்பெயர்வுகள் காரணமாகவும் போர் அழிவுகள் காரணமாகவும் பெருமளவு மக்களின் சொந்தமான காணி ஆவணங்கள் சொத்துக்கள் இழக்க வேண்டி ஏற்பட்டது. அத்துடன் சுனாமி மூலம் எமது மக்கள் சொத்துக்கள் ஆவணங்களை இழந்தார்கள். ஆகவே ஆவணங்களை உறுதிபடுத்துவது சாத்தியமற்ற விடயம். அதேவேளை போர் காரணமாக தமிழீழ மக்களின் சனத்தொகை பரம்பல் புலம்பெயர்ந்துள்ளது.

இந்தியாவில் 1 லடச்த்திற்கும் மேற்பட்ட எமது ஈழ தமிழர்கள் இந்திய பிரஜைகளாக அங்கீகாரமின்றி வாழுகின்றனர் அவர்கள் அங்கு அங்கீகரிக்கப்பட போவதுமில்லை. இவ்வாறான நிலையில் அந்த மக்கள் தங்களுடைய தாய் நாட்டிற்கு வருகை தரவேண்டிய சூழல் ஏற்பட்டால் அவர்கள் இங்கே வாழ முடியாத சூழல் உருவாகும் இந்தியாவிற்கு மிகப்பெரிய பங்கு உள்ளது என்ற அடிப்படையில் இந்திய தூதுவரையும் சந்தித்தோம்.

இந்த மக்கள் அரசின் பயங்கரவாத அச்சுறுத்தல் மூலமே நாட்டினை விட்டு வெளியேறினார்கள். இந்நிலையில் அரசு இந்த வர்த்தமானியை வெளியிட்டதன் நோக்கம் மக்களின் காணி பிரச்சினைகளை தீர்ப்பதல்ல. மாறாக மக்களின் ஆவணங்களற்ற காணிகளை அரச காணிகளாக சுவீகரிப்பதே இவர்களது நோக்கமாக உள்ளது.

ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு உரித்துக்கள் வழங்கவேண்டும் என்பதில் மாற்று கருத்திற்கு இடமில்லை இந்த வர்த்தமானி மூலம் மேற்கொள்ளப்படுகின்ற திட்டத்தினை முற்று முழுதாக ஏற்றுகொள்ள முடியாது. எனவே குறித்த வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படல் வேண்டும். அதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இரண்டாவது விடயம் குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்தின்குச் சொந்தமான 79 ஏக்கர் நிலப்பரப்பிற்கு மேலதிகமாக 325 ஏக்கர் காணியினை விகாரைக்குரிய புத்த பிக்கு கோரியிருந்தார். ஆனால் அக்காணிகள் தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமானதல்ல என்ற அடிப்படையிலும் அப்பகுதியில் பெருமளவு விவசாயிகளது விவசாய நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் பிக்குவும் தொல்பொருட் திணைக்களத்தினரும் பொலீசாரது ஒத்துழைப்புடன் சொந்தக் காணியில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள் இருவரையும் கைது செய்து உளவு இயந்திரத்தையும் நீதிமன்றில் நிறுத்தி நீதிமன்றின் மூலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க குறித்த 325 ஏக்கர் நிலத்தையும் விடுவிக்க வேண்டுமென மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கூறியிருந்தார். அவ்வாறு சனாதிபதி முன்னிலையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்வு எட்டபட்ட பின்னரும் அத்தீர்மானத்தையும் மீறி இன்றும் கூட அந்த வளாகத்தில் உள்ள குளத்தில் மீன்பிடி தடையும் விதிக்கப்பட்டுள்ளதோடு விவசாயத்திற்கு குறித்த நீரை பயன்படுத்த தடையையும் விதித்து விவசாயமும் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயத்தில் தலையிட்டு சனாதிபதி ரணில் இணங்கியவாறு குறித்த 325 ஏக்கர் நிலத்தையும் தொல்பொருள் திணைக்களம் விடுவிக்கவும் பிக்குவின் அடாவடியை கட்டுப்படுத்தவும் சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

மூன்றாவதாக தையிட்டி சட்டவிரோதமான விகாரை என்று தெரிந்தும் இன்னமும் அந்த காணிகளின் உரிமையாளர்களிடம் வழங்காது அரசின் செயற்பாடுகள் தொடர்கின்றது தையிட்டி விகாரை சட்டவிரோதமானது தொல்பொருளுடன் தொடர்பு அற்றது சட்டவிரோதமாக கட்டப்பட்டது அகற்றபட்டே ஆகவேண்டும் காணிகள் உரிமை யாளர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

எனவே இலங்கையின் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கரிசனை செலுத்தும் மைய நாடுகளாக பிரித்தானியா மற்றும் கனடா என்பன இருக்கின்றன ஐக்கிய நாடுகள் சபைக்கு இது தொடர்பில் பங்கு இருப்பதால் ஐநாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியிடமும் இவ்விடயத்தில் அவரது தலையீட்டை வலியுறுத்தியுள்ளமாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# தன்னைத் தடுத்து வைத்துள்ளதன் மூலம் சட்டவிரோதம் அடிப்படை உரிமைகளை இலங்கை புலனாய்வுத்துறை மீறியதற்காக தெரிவித்து நூறு மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி உயர் நீதிமன்றில் மனு சமர்ப்பித்துள்ள பிள்ளையான் என்னும் கொலையாளி



கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்து தடுத்து வைக்க குற்றப் புலனாய்வுத் துறை எடுத்த முடிவு, தனது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக தீர்ப்பளிக்கக் கோரி, பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக குற்றப் புலனாய்வுத் துறையின் விசேட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன, குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் இமே' முத்துமால, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சர் அனுரகுமார திஸ ாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 8 ஆம் திகதி, தனது கட்சியின் அமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்றுக் கொண்டிருந்தபோது, குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிக-ாரிகள் குழு வந்து மட்டக்களப்புப் பகுதியில் தன்னைக் கைது செய்ததாகவும்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பாக தான் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்.

குற்றப் புலனாய்வுத் துறையில் தூங்குவதற்குக் கூட தனக்கு போதுமான வசதிகள் இல்லை எனவும் சட்டத்தரணிகளை சந்திக்க போதுமான வாய்ப்பு தனக்கு இல்லை எனவும் இந்த முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் தனது அரசியல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மனுவில் சுட்டிக் காட்டியுள்ளதுடன்.

எந்தவொரு நியாயமான காரண-மும் இல்லாமல் குற்றப் புலனாய்வுத் துறை தன்னைக் கைது செய்து தடுத்து வைத்தது தனது அடிப்படை மனித உரிமைகளை மீ-றுவதாகவும், தன்னைத் தடுத்து வைக்கப் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவை செல்லாததாக்கும் தீர்ப்பை பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர் உயர் நீதிமன்றத்தைக் கோரினார்.

அதேவேளை தனது சட்டத்தரணிகளை அணுகுவதைத் தடுப்பதன் மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரியும், தனது அடிப்படை உரிமைகளை மீறியதற்காக நூறு மில்லியன் ரூபாய் இழப்பீடு கே-ாரியும் பிள்ளையான் தனது சட்டத்தரணிகள் மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

**Grand Opening Ceremony of Manoj Rajasri Law-Legal Leo office, took place in Scarborough on 10th of May 2025, gathered by Community Leaders and Businessmen, was graceful.**

# கடந்த 10ம் திகதி சனிக்கிழமையன்று Manoj Rajasri Law-Legal Leo, சட்ட நிறுவனத்தின் திறப்பு விழா ஸ்காபுறோவில் சிறப்பாக நடைபெற்றது








Manoj Rajasri Law-Legal Leo என்னும் சட்ட நிறுவனத்தின் திறப்பு விழா கடந்த 10ம் திகதி சனிக்கிழமையன்று மதியம் 105/ 2855, Markham Road in Scarborough என்னும் விலாசத்தில் அமைந்துள்ள புதிய அலுவலகத்தில் நடைபெற்றது.








ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார அமைச்சின் இணையமைச்சர் விஜேய் தணிகாசலம் மற்றும் முதியோர் விவகார அமைச்சர் Raymond Cho ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் அழைக்கப்பட்டிருந்தனர். இணையமைச்சர் விஜேய் தணிகாசலம் அவர்கள் சமூகமளித்திருக்க சட்டத்தரணி மனோஜ் அவர்களின் பெற்றோர் திரு.திருமதி. ராஜஶ்ரீ தம்பதி நாடாவை வெட்டி புதிய சட்ட அலுவலகத்தைத் திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து அவரும் அமைச்சர் Raymond Cho அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் சிறப்புரையாற்றினார்கள். புதிய சட்டத்தரணி மனோஜ் ராஜஶ்ரீ அவர்களும் அவரது தந்தையார் ராஜஶ்ரீ அவர்களும் அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினார்கள். சட்டத்தரணி மனோஜ் ராஜஶ்ரீ அவர்களும் உரையானது கலகலப்பாகவும் அங்கு கலந்து கொண்டவர்களை உற்சாகப்படுத்துவதுமாக அமைந்திருந்தது.







NISSAN | VILLAGE NISSAN

# தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



*DAA ROTATION



*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24








Toronto சிட்டி கவுன்சிலர்

# PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

## HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுலட்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

**நியமன அலுவலகம்**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**


Congratulation!
UTHAYAN INTERNATIONAL AWARD 2025
Logan Kanapathi
MPP | Markham-Thornhill
Tel: 905-305-1935
Email:
logan.kanapathico@pc.ola.org

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2025

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினேழாவது முறையாக நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் மூன்றாம் நாள் (ஆங்கிலம்16-05-2025) வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 26ம் நாள் ஆங்கிலம் 08-06-2025 ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 09-06-2025 திங்கள்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பாலசூரியர், சிவாகமவித்வான்
சிவஸ்ரீ கோகுலநாத குருக்கள்
ஸ்ரீநாகபூசணி அம்மன் திருக்கோவில் U.K. லண்டன் ஸ்தாபகர்
மற்றும் பிரதம குருக்கள்

ஆலய குருமார்:
சிவஸ்ரீ விஸ்வநாத கைலசநாத குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ சண்முக ஜனார்த்தன குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

15-05-2025 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 16-05-2025 | வெள்ளி | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 17-05-2025 | சனி | திரு. சுகுனேந்திரன் வாசுகி குடும்பம்-புங்குடுதீவு<br>சிவநேசராசா காளிராசா குடும்பம்-மீசாலை | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 18-05-2025 | ஞாயிறு | திரு. பாலகாந்தன் கனகசபை குடும்பம்<br>கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம்<br>சுழிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 19-05-2025 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம்<br>கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 20-05-2025 | செவ்வாய் | திரு. பாலச்சந்திரன் ரதிமாலா குடும்பம்<br>பிருந்தாவன உணவகம் | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 21-05-2025 | புதன் | சிவகுமார் தியாவி<br>திருச்சி | ஜெயராம் அபிராமி குடும்பம்<br>மட்டுவில் | கப்பல் திருவிழா |
| 07 | 22-05-2025 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம்<br>தையிட்டி, காங்கேசன்துறை | பசுபதிப்பிள்ளை குமரசற்குணன்<br>குறிகட்டுவான் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 23-05-2025 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம்<br>தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம்<br>சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 24-05-2025 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம்<br>அல்வாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம்<br>தாவடி | மூஷிக வாகனம் |
| 10 | 25-05-2025 | ஞாயிறு | திரு. தவராசா சிவசோதி குடும்பம்<br>அனலைதீவு | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம்<br>Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 26-05-2025 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம்<br>கோப்பாய் | ஓர் அன்பர் | மயில் வாகனம் |
| 12 | 27-05-2025 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம்<br>நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன்,<br>தனுஷன், அனோயன், நிக்ஷன்<br>குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 28-05-2025 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம்<br>(கனடா) | ஓர் அன்பர் | குதிரை வாகனம் |
| 14 | 29-05-2025 | வியாழன் | ஓர் அன்பர் | செந்தூரன் லாவன்யா குடும்பம்<br>மட்டக்களப்பு | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 30-05-2025 | வெள்ளி | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில்<br>ONGO I LOGISTIC | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம்<br>பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 31-05-2025 | சனி | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம்<br>புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 01-06-2025 | ஞாயிறு | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம்<br>சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம்<br>-மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 02-06-2025 | திங்கள் | ஓர் அன்பர் (பிரம்ரன்) | திரு. ஜெய்கீதா குடும்பம்<br>கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 03-06-2025 | செவ்வாய் | திரு. சந்திரமோகன்<br>சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம்<br>Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 04-06-2025 | புதன் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம்<br>அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 05-06-2025 | வியாழன் | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன்<br>குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 06-06-2025 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 07-06-2025 | சனி | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம்<br>சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 08-06-2025 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS<br>அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார்<br>தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா<br>தேரடி உற்சவம் |
| 25 | 09-06-2025 | திங்கள் | தீர்த்தத் திருவிழா -<br>திரு லெட்சுமன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம்<br>தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரர் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 10-06-2025 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | பிராயச்சித்தம் |
| 27 | 13-06-2025 | வெள்ளி | | லக்ஷி சுப்பர் மார்க்கட் | வைரவர் மடை |
| 28 | 14-06-2025 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் - | அனலைதீவு | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி நான்காவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 14, 15, 16ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்.**

### திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை

காலை திருவிழா
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

மாலை திருவிழா
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - முனிராஜ் முனிரெத்தினம்
அர்ஜுணன் கிருஷ்ணகுமார் - பழனிவேல் கோபாலகிருஷ்ணன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
*200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4*
*Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326*
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

VIVEKA

கனடிய செய்திகள் Canadian News

# கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வாழ்த்து!



கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பொறுப்பேற்றுள்ள, ஈழத்தமிழரான ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.


இதுதொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று அன்றையதினம் அமைச்சுப் பொறுப்பேற்ற ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மையில் நடைபெற்று முடிந்த கனேடிய நாடாளுமன்றத் தேர்தலில் Scarborough - Guildwood - Rouge Park தொகுதியில் அமோக வெற்றிபெற்று, கனேடிய நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானதுடன், ஒட்டாவா மாநகரி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகவும் பதவியேற்றிருக்கும் தங்களுக்கு, ஈழத்தமிழர்கள் சார்பில் எனது இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் நிறைவடைகிறேன்.

அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் வலிந்து ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களின் நேரடிப் பிரதிநிதியான தாங்கள், உங்களின் தனிமனித வாழ்வில் எதிர்கொண்ட ஏராளமான தடைகளையும், சவால்களையும் உந்திக்கடந்ததன் பயன்விளைவாய், ஈழத்தமிழ் வம்சாவழியைச் சேர்ந்த ஒருவராக, சமூகநேயம் மிக்க மக்கள் தொண்டராக இருந்து பின் அரசியல் பணியில் அடியெடுத்துவைத்து, இன்று கனேடிய நாடாளுமன்ற உறுப்பினராகவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகவும் பெருமிதத்தோடு பதவியேற்றுள்ளமை காலத்தின் பதிவே ஆகும்.

சவால்களின் எல்லைகளைக் கடந்து நிமிர்ந்தெழுந்து நிற்கும் ஈழத்தமிழர்களின் பிரதிநிதியான தங்களை, எமது உணர்வுகளோடு நெருக்கமான, எங்களில் ஒருவராகவே எம்மால் பார்க்கமுடிகிறது. அத்தகு மனநிறைவோடு, மக்கள் பணி என்ற மகத்தான கொள்கையோடும், இலட்சியத்தோடும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியாக பொறுப்பேற்றிருக்கும் தாங்கள், ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களிலும், அரசியல் விவகாரங்களிலும் தங்கள் இயலுமைக்கு உட்பட்ட பணிகளில் இதயசுத்தியோடு இணைந்து செயற்படுவீர்கள் என்ற பெருநம்பிக்கையோடு, உங்களின் வெற்றிக்கான வாழ்த்துகளைக் கூறும் அதேவேளை தங்கள் பணி சிறக்க இறை ஆசிகளையும் வேண்டி நிற்கிறேன் என்றுள்ளது.






# ஒன்றாறியோ கல்விச் சபைகள் பலவற்றிலும் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைத்திட்டம் விரிவடைகிறது

## ஒட்டாவா மற்றும் வோட்டலூ பிரதேசங்களும் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைத் திட்டத்தை அங்கீகரித்துள்ளன

2021ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை - சட்டமூலம் 104 நிறைவேற்றப் பட்டதிலிருந்து, மே 12 முதல் மே 18 ஒன்றாறியோவின் கல்விச்சபைகளெங்கும் அதன்மட்டிலான ஈடுபாடும் அதற்கான அங்கீகாரமும் அதிகரிந்து வருகின்றன. சட்டமூலம் 104 ஆனது, இப்போது இன அழிப்பை நினைவுகூருதல் மற்றும் அதுதொடர்பான கற்பித்தல் மட்டில் மாநில அளவில் உறுதியான நிலையை எட்டியுள்ளது.



தமிழின அழிப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரவும், இன அழிப்பிலிருந்து உயிர் தப்பியவர்கள் தம் தலைமுறைகளினூடே அனுபவித்துவரும் துயர்களைப் பகர்ந்துகொள்ளவும், சிறிலங்கா அரசினால் தொடர்ந்து நடத்தப்பட்டுவரும் தமிழின அழிப்புப் பற்றிய அறிவூட்டலை மேற்கொள்ளவும் இவ்வாரம் வழிவகுக்கும்.

இந்த ஆண்டு, ஒட்டாவா கத்தோலிக்க கல்விச் சபை (OSCB) தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது. இது கனடாவின் தலைநகரான ஒட்டாவாப் பகுதியில் தமிழின அழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கிய விரிவாக்கமாகும்.

மேலும், இவ்வாண்டு, ஒன்றாறியோவின் மிகப் பெரிய காவற்றுறைச் சேவைகளில் ஒன்றான வோட்டலூ பிராந்திய காவற்றுறையும் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது.

“தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை ஒன்றாறியோ முழுவதுமுள்ள கல்விச் சபைகளில் அதற்கான அங்கீகாரத்தையும் அனுசரணையையும் பெற்றுவருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்” என்று ஒன்றாறியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும் ஸ்காபரோ - றூஜ் பார்க்கின் மாநில சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் தெரிவித்தார். ”கல்வி என்பது கடந்த கால நினைவுகளைப் பாதுகாக்கவும், அவற்றிலிருந்து நிவராணம் பெறும் செயற்பாட்டைத் தொடங்குவதற்கும் நம்மிடமுள்ள மிக சக்திவாய்ந்த ஒரு கருவியாகும்” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

றொறன்ரோ வலய கல்விச் சபை (TDSB) தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. றொறன்ரோ கல்விச் சபையானது கனடாவின் மிகப்பெரிய கல்விச் சபையாகும். இது ஏறத்தாழ 250,000 மாணவர்களையும், 600 பள்ளிகளையும் தன்னகத்தே கொண்ட வட அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய கல்விச் சபைகளில் ஒன்றாக விளங்குகிறது. இதேபோல், றொறன்ரோ வலய கத்தோலிக்க கல்விச் சபையும் (TCDSB) தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையைத் தொடர்ந்தும் அங்கீகரித்து வருகிறது. இக்கல்விச் சபையும் ஏறத்தாழ 85,000 மாணவர்களையும் 200 பள்ளிகளையும் கொண்டதாக இயங்குகிறது.

இதேபோல், யோர்க் பிராந்திய கல்விச் சபை (YRDSB), பீல் பிராந்திய கல்விச் சபை (PDSB) மற்றும் டூரம் வலய கல்விச் சபை (DDSB) உட்பட்ட ஒன்றாறியோவிலுள்ள பிற முக்கிய கல்விச் சபைகளும் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையைக் கடைப்பிடிப்பதில் பங்குவகிக்கின்றன.

தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையை மேலும் பல கல்விச் சபைகள் அங்கீகரித்து அதனனை நடைமுறைப்படுத்துவதால், தமிழின அழிப்புத் தொடர்பான கற்பித்தலில் ஒன்றாறியோ முன்னணி வகிக்கிறது. சட்டமூலம் 104, தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமையில் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் அதுதொடர்பான பட்டறைகளில் பங்குபற்றவும், கருத்தரங்குகளை நடத்தவும், தமிழின அழிப்பின் மூலங்களையும், தொடர்ந்தும் நடைபெறும் தமிழின அழிப்புப் பற்றி அறிந்துகொள்ளவும் வழிவகுக்கிறது.

# கனடா வாழ் கலாநிதி பால. சிவகடாட்சம் அவர்கள் எழுதிய மருத்துவ நூல் ஒன்றுக்கு தமிழ்நாட்டு நிறுவனங்கள் வழங்கியுள்ள சிறப்பு விருது

கனடா வாழ் விவசாயத்துறை கலாநிதியும் எழுத்தாளருமான பால. சிவகடாட்சம் அவர்கள் எழுதிய மருத்துவ நூல் ஒன்றுக்கு தமிழ்நாட்டு நிறுவனங்களான தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் சென்னை நியு செஞ்சரி புத்தக நிலையமும் இணைந்து விருதொன்றை வழங்கியுள்ளன. அவரது “தமிழர் மருத்துவம் - ஒரு வரலாற்றுப் பார்வை” என்னும் நூலுக்கே இவ்வாறு வழங்கப்பெற்றுள்ள சிறப்பு விருது கிடடியுள்ளது பாராட்டுக்குரியது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஆனையிறவு உப்பள ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்!

பு. கஜிந்தன்




ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி 14ம் திகதி புதன்கிழம அன்றையதினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், நாங்கள் தற்போதுள்ள பொது முகாமையாளர், முகாமைத்துவ பிரிவினர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட பலர் எம்மை பழிவாங்குவது போல் செயற்படுகின்றனர். எமக்கு உரிய வகையில் வேலைகளை வழங்குவதில்லை.

எமக்கான மருத்துவ வசதிகள் உப்பளத்தில் இல்லை. குடிநீர் பிரச்சனை காணப்படுகிறது. குடிநீரை வெளியே உள்ள தாங்கியில் இருந்துதான் உள்ளே எடுத்து செல்ல வேண்டும். மதியம் 10 மணி ஆனதும் நாங்கள் எடுத்துச் செல்லுகின்ற குடிநீரோ அல்லது தாங்கியில் உள்ள குடிநீரோ மிகவும் சூடாகி காணப்படும், ஆகையால் நாங்கள் அதனை குடிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த மாதம் தொடங்கி இதுவரை எமக்கு 4 நாட்களே வேலை வழங்கப்பட்டது, 10 நாட்கள் வேலை இல்லாமலே இருக்கின்றோம். இதைவிட இந்த மாதம் வேலை செய்யாத ஊழியர்கள் கூட காணப்படுகின்றனர். மனித வலு இருக்கும்போது இயந்திரவலுவை பயன்படுத்துகின்றனர். வேலை செய்யும் எமக்கு சீருடைகளோ, பாதுகாப்பு கவசங்களோ வழங்கப்படுவதில்லை.

ஒரு ஊழியர் உப்பளத்தில் வேலை செய்யும்போது இறந்தால்கூட எமது பணத்தில் தான் அவரது சடலத்தை கொண்டு செல்ல வேண்டும், அவரது கண்ணீர் அஞ்சலி பத்திரிகைகள் கூட எமது பணத்தில் தான் வெளியிட வேண்டுமே தவிர நிறுவனம் எமக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளையும் வழங்காது.

இந்த உப்பளத்தை திறந்து வைக்கும்போது 8ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொதி வழங்குவதாக அமைச்சர் கூறினார், ஆனால் எமக்கு பின்னர் வழங்கப்பட்டது 800 ரூபா பெறுமதியான உலருணவுப்பொதியே.

அனைத்து ஊழியர்களுக்கும் ஒரே அளவான போனஸ் கொடுப்பனவே வழங்கப்பட வேண்டும் என்ற நடைமுறை காணப்படுகிறது. ஆனால் இங்கு எமது வரவினல பார்த்து, மிகவும் குறைந்த போனஸ் தொகையே கொடுப்பார்கள். வேலைக்கு வராதது எமது பிழை அல்ல. எமக்கு சுழற்சி முறையிலான வேலையையே வழங்குகின்றனர் ஆகையால் நாங்கள் எப்படி ஒழுங்காக வேலைக்கு வருவது?

எமக்கான ஒரு தொழிற்சங்கத்தை இயங்க விடுவதில்லை. ஊழியர்களின் நலனுக்காக யாராவது குரல் கொடுத்தால் அவரை பிடித்து அடித்து வெளியே துரத்துங்கள் என கூறுவார்கள். இது அரச நிறுவனம் போல் இல்லாது முதலாளித்துவத்துடன் கூடிய தனியார் நிறுவனம் போலவே செயற்படுகிறது.

ஒரு நாள் 5 ஊழியர்களின் உழைப்பு மட்டும் போதும் இங்கு வேலை செய்கின்ற அனைத்து ஊழியர்களின் ஒருநாள் சம்பளத்தை கொடுப்பதற்கு. அவ்வளவு இலாபம் ஈட்டும் உப்பளமாகவும், இலங்கையின் மிகவும் பெரிய உப்பளமாகவும் இந்த உப்பளம் காணப்படுகிறது.

ஊழியர்களின் நலனுக்காக யாராவது அதிகாரி இங்கு குரல் கொடுத்தால் உடனே அவரை இடமாற்றம் செய்கின்றனர். பல வருடங்கள் இங்கு பணியாற்றியவர்களை கூட மதிப்பதில்லை. இங்கு பணிபுரியும் முகாமையாளர் உள்ளிட்ட பலர் உப்பு தொடர்பான அடிப்படை அறிவற்றவர்களாகவே காணப்படுகின்றனர். ஏற்கனவே இங்கு பணியாற்றியவர்களின் அனுபவங்களை கூட அவர்கள் கேட்பதில்லை. அப்படி கூறினாலும் அதனை தட்டிக்கழிக்கின்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற உப்பினை ஹம்பாந்தோட்டை, மன்னார், புத்தளம் உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு சென்று அங்கு வைத்து பொதியிட்ட பின்னர் மீண்டும் எமது பகுதிகளுக்கு கொண்டுவந்து விநியோகம் செய்கின்றனர். இதனால் இரண்டு போக்குவரத்து செலவு காரணமாக உப்பின் விலையை அதிகரித்து விற்பனை செய்கின்றனர். எமது பகுதியில் விளையும் உப்பினை இங்கேயே வைத்து பொதியிடக்கூடிய வசதி இருந்தும் ஏன் வெளி மாவட்டம் கொண்டு செல்ல வேண்டும்?

மழை பெய்தால் எம்மை வேலைக்கு வரவேண்டாம் என கூறுகின்றனர். ஆனால் மழை பெய்தாலும் இங்கே செய்வதற்கு பல வேலைகள் உள்ளன. ஒரு தொழிற்சாலைக்கு இலாபம் வரும்போது நாங்கள் வேலை செய்கின்றோம், அதுபோல அந்த அந்த தொழிற்சாலைக்கு நஷ்டம் ஏற்படும்போதும் அந்த தொழிற்சாலை அதனை தாங்கிக்கொண்டு எமக்கு வேலையை வழங்கத்தான் வேண்டும். ஆனால் இங்கே அவ்வாறான நடைமுறைகள் காணப்படுவதில்லை.

ரஜ உப்பு என்ற பெயரை மாற்றம் செய்து ஆனையிறவு உப்பு என்ற பெயரில் மாற்றியதாக கூறுகின்றனர். ஆனால் இதுவரை பொதி செய்த உப்பு பைகளில் ரஜ உப்பு என்றே காணப்படுகிறது. ஆனையிறவு உப்பு என்ற பெயர் மாற்றம் செய்யப்படவில்லை.

பெண் ஒருவர் தினமும் 65 அந்தர் (3250 கிலோ) உப்பு அள்ள வேண்டும் என கூறி அவர்களை மிகவும் கொடுமைப்படுத்துகின்றனர்.

இலாபத்தை பகிர்ந்து அளிப்பதாக அமைச்சர் கூறியிருந்தார் ஆனால் அதனை பகிர்ந்து வழங்குவதற்கு யாரும் தயாராக இல்லை, அந்த இலாபத்தை எமக்கு பகிர்ந்தளிக்கின்றனர் இல்லை.

இந்த கவனயீர்ப்பில் ஈடுபட்டபோது முகாமையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் எங்களை கதைப்பதற்கு உள்ளே அழைத்தனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உள்ளிட்ட ஊழியர்களும் உள்ளே சென்றோம். ஆனால் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கவில்லை. உள்ளே சென்று கலந்துரையாடியபோது அவர்கள் எங்களது பிரச்சினைகளை கருத்தில் கொள்ளவில்லை. நாங்கள் மண்வெட்டி பிடி திருடினோம், உப்பு திருடினோம் என்று பொய்யான குற்றச்சாட்டு கூறுகின்றார்களே தவிர எமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதுபோல் தெரியவில்லை.





இது பார்ப்பதற்கு வெளியே ஒரு தேசிய உப்பளமாக காணப்பட்டாலும் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே இதற்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.

# தேர்தல் முடிவுகள் தோல்வியிலும் வெற்றியை தந்துள்ளது

## ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தெரிவிப்பு!



தோல்வியிலும் வெற்றி என்ற நிலையில்தான் தற்போது நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபை தேர்தலின் பெறுபேறுகள் அமைந்துள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உள்ளூர் அதிகார சபையில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பிரதேச பொறுப்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தோரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் தேர்தல் அடைவு நிலை குறித்து ஆராய்ந்ததுடன் கிடைத்த வெற்றிகளை மூலதனமாக கொண்டு அடுத்த கட்டம் நோக்கி முன்னேறிச் செல்வது குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் மேலும் கருத்து தெரிவித்த செயலாளர் நாயகம், உசுப்பேற்றியோ, போலி வாக்குறுதிகளையோ போதை ஏற்றும் சன்மானங்களையோ வாக்காளர்களுக்கு கொடுத்திருக்கவில்லை.

நாம் வழமை போன்றே எமது நிலைப்பாடுகளை வெளிப்படையாக கூறி மக்களிடம் சென்றிருந்தோம். அதன் முடிவுகள் வந்துள்ளன. அவை எமக்கு சர்பாக இல்லாவிடினும் கிடைத்தவை தோல்வியிலும் வெற்றிக்கான சமிக்ஞையாகவே இருக்கின்றது. அதேநேரம் ஆட்சியில் பங்கெடுக்கும் விருப்பம் எமக்கில்லை.

குறிப்பாக தேசிய மக்கள் சக்தி என்ற ஜே.வி.பியிடம் தேசிய நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான நல்லுறவு என்பது அறவே இல்லாது போய்விட்டதுடன் அது மறுக்கப்படுள்ளமையால் உள்ளூர் அதிகார சபைகளில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவை நாம் வழங்கப்போவதில்லை.

இதுவே கட்சியின் முடிவாகவும் இருக்கின்றது.

அதேநேரம் ஏனைய தமிழ் கட்சிகளுக்கான ஆதரவும் அவர்கள் அதிகரபூர்வமாக கோரும் பட்சத்தில் சூழ்நிலையை கருத்தில் கொண்டே எடுக்கப்படும். குறிப்பாக இது கட்சியின் எதிர்காலம் மற்றும் மக்களின் நலன்களுடன் தொடர்புடையதாகவே இருக்கும் என்றார்.

## வீணாவின் கவிக்கணை

அன்பை தேடி
வம்பை வாங்கி,
உண்மை தேடி
பொய்மை வாங்கி,
தோல்வியுற்று
துன்பம் கண்டு
எல்லாம் இழந்து
மனதில்
இருளும் சூழ்ந்து
விரக்தி அடையும்
அந்த நொடியிலும்
உரக்கக் கத்திச் சொல்லிடு
நம்பிக்கையுடன்
வாழ்ந்திடுவேன்
என்னை நான்
நம்பிடுவேன் என்று.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவின் புதிய மத்திய அமைச்சரவையில் பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகள் அமைச்சராகப் பதவியேற்றார் ஹரி ஆனந்தசங்கரி



அண்மையில் நடைபெற்ற மத்திய பாராளுமன்றத்திற்கான தேர்தலில் வெற்றிபெற்ற லிபரல் அரசாங்கத்தின் அமைச்சரவை பதவியேற்பு வைபவம் கடந்த 12ம் திகதி திங்கட்கிழமையன்று காலை ஒட்டாவா மாநகரில் நடைபெற்றது. இதில் பிரதமராக மார்க் கார்னி அவர்களும் மேலும் 30 அமைச்சர்களும் பதவியேற்றார்கள். இதில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் நீதி அமைச்சராகவும் சட்டமா அதிபராகவும் பழங்குடியினர் விவகார அமைச்சராக பணியாற்றிய ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகள் அமைச்சராகப் பதவியேற்றார்.

அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தனது இளம் வயதில் கனடாவில் குடியேறி இங்கு கல்வி கற்று பின்னர் பல்கலைக்கழகப் பட்டங்களையும் சட்டத்துறை பட்டத்தையும் பெற்று தொடர்ந்து அரசியலில் புகுந்தார். அதற்கு முன்னர் கனடாவின் தமிழர் சமூகம் சார்ந்த பல அமைப்புக்களிலும் முக்கிய பதவிகளை வகித்து சேவையாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடாவின் புதிய மத்திய அமைச்சரவையில் பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகள் அமைச்சராகப் பதவியேற்றுள்ள ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் அமைச்சர் என்ற வகையில் பின்வரும் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் கொண்டிருப்பார் என்பதும் கவனிக்கத்தக்கதாகும். தமிழர் ஒருவர் கனடாவில் இந்த பொறுப்புக்கள் வாய்ந்த அமைச்சராகப் பணியாற்றுவது உலகத் தமிழர்களும் பெருமை தேடித்தரும் விடயமாகும்.






முக்கிய பொறுப்புகள்:

அவசரநிலை மேலாண்மை:

கனடாவில் அவசரகால நிர்வாகத்திற்கு பொதுப் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடவடிக்கைகள் அமைச்சர் வழிநடத்துகிறார், மத்திய அரசிற்குள் அடங்கும் அமைப்புகளை ஒருங்கிணைத்து மாகாணங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் பணிபுரிகிறார். பல்வேறு அவசரநிலைகளிலிருந்து தயாராக, பதில் மற்றும் மீட்பு ஆகியவை இதில் அடங்கும்.

பொது பாதுகாப்பு:

பொது பாதுகாப்பு விஷயங்களுக்கான மத்திய கூட்டாட்சி அமைப்பான பொது பாதுகாப்பு மற்றும் அவசரகாலத் திணைக்களத்திற்கு அமைச்சர் பொறுப்பு.

தேசிய பாதுகாப்பு:

பயங்கரவாதம் மற்றும் சைபர் கிரைம் உள்ளிட்ட அச்சுறுத்தல்களிலிருந்து கனேடியர்களைப் பாதுகாப்பதில் அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார், மேலும் மத்திய அரசின் கீழ் வரும் துறைகள் மற்றும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள முகவர் நிறுவனங்களின் பணிகளை மேற்பார்வை செய்வதும் அமைச்சரின் கடமையாகும்.

கனடாவின் மத்திய அமைச்சின் கீழ் வரும் தேசிய பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்களும் சபைகளுமான றோயல் கனடிய மவுண்டட் பொலிஸ் (ஆர்.சி.எம்.பி), கனேடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை (சி.எஸ்.ஐ.எஸ்), கனடா எல்லை சேவைகள் நிறுவனம் (சிபிஎஸ்ஏ), மற்றும் கனடாவின் பரோல் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு மத்திய அரசின் அமைப்புகளின் நடவடிக்கைகளை அமைச்சர் மேற்பார்வைசெய்யும் பொறுப்புக்களைக் கொண்டவர்.

கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு கனடா உதயன் ஆசிரிய பீடம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் யாழ் பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட்

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு 15ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை மதியம் மன்னார் நகர பேருந்து நிலைய பகுதியில் இடம்பெற்றது.

எம்மவர்களின் வலி நிறைந்த வரலாற்றை அடுத்த சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் கடத்தும் கடமை பல்கலைக்கழக மாணவர்களாகிய தமது பொறுப்பு என அவர்கள் தெரிவித்து குறித்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன் போது குறித்த பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி காய்ச்சப்பட்டு மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

மே-12 ஆம் திகதி தொடக்கம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை யாழ் பல்கலைக்கழக சமூகம் முள்ளிவாய்க்கால் நினைவு வாரமாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சியை நேரடியாக சென்று காய்ச்சி மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.





இந்த நிலையிலே வியாழக்கிழமை 4வது நாளாக மன்னாரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கப்பட்டதாக மன்னாரிற்கு வருகை தந்த யாழ் பல்கலைக்கழக சமூகத்தினர் தெரிவித்தனர்.

# காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி கண்ணீர் சிந்திய எத்தனையோ கண்கள் மூடி விட்டன.இதற்கு சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றது?

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் கேள்வி

**- எஸ்.ஆர்.லெம்பேட் (13-05-2025)**

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி கண்ணீர் சிந்திய எத்தனையோ கண்கள் இன்று மூடி விட்டன. இன்னும் எத்தனை கண்கள் மூடப் போகின்றதோ தெரியாது. இதற்கு சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றது? என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் 13ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை மதியம் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடி பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி நினைவு கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு தாய்மாரும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தமிழினமும் கொல்லப்பட்டு, அழிக்கப்பட்ட அந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் இரத்தமும், சதையும் சிந்தப்பட்டு அந்த நாளை கடந்த 16 வருடங்களாக ஒவ்வொரு தமிழ் உறவுகளும் நினைவு கூர்ந்து கஞ்சி காய்ச்சி வழங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இந்த கஞ்சி 16 வருடங்களுக்கு முன் ஒரு பிடி அரிசி கூட கிடைக்காமல் இருந்த அரிசியை வைத்து தண்ணீர் ஊற்றி உப்பும் இல்லாமல் அங்கிருந்த அமைப்புகள் குறித்த கஞ்சியை பொதுமக்களுக்கு வழங்கி உள்ளனர்.

அதில் சிலருக்குத்தான் இந்த கஞ்சி கிடைத்தது.வரிசையில் நின்று இந்த கஞ்சியை வாங்கி பசியை போக்குவோம் என்ற நேரத்தில் கூட கொடூர யுத்தம் முன்னெடுக்கப்பட்டது அந்த அரசாங்கத்தினால்.

கஞ்சிக்காக வரிசையில் நின்ற எத்தனையோ உறவுகள் கஞ்சி கிடைக்காமல் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர். இன்று அதை மறக்கவும் முடியாது. மன்னிக்கவும் முடியாது.



எம் இனத்திற்கு நடந்த கொடூரத்தை உலக நாடுகள் அனைத்தையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தது. இன்று வரையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது. இந்த கஞ்சியை நாம் வழங்குவதற்கு காரணம் தற்கால இளைய சமூகத்திற்கு 16 வருடங்களுக்கு முன் என்ன நடந்தது என்பது தெரியாது.

16 வருட கால இடைவெளியில் நிறைய நிறைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவை எல்லாம் எம் சமுதாயத்தின் இளைஞர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் முதியவர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் என்ற இடத்தில் இன்று வரையும் இரத்தமும் சதையும் சிந்திக் கொண்டே இருக்கிறது. அதனை ஒவ்வொரு வருடமும் மே மாதம் 18 ஆம் திகதி ஒவ்வொரு இறந்த ஆத்மாக்காகவும் நினைவு கூற வேண்டும்.


அது தான் நாம் எம் இனத்திற்கு செய்கின்ற பரிகாரம். அதை தான் இன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகிய நாமும் நினைவு கூர்ந்து 16 வருடமாக அங்கே சென்று வந்து கஞ்சி காய்ச்சி நினைவு படுத்திக் கொண்டு வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிக்கொண்டு ஒவ்வொரு உள்ளங்களும் இன்று வீதியில் நின்று போராடிக் கொண்டு,எம் உறவுகள் மீண்டும் எம்மிடம் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையில் நாங்கள் காவல் நிற்கின்றோம்.

எம் கண்ணீர் என்று துடைக்கப் படுமோ தெரியாது. ஆனால் கண்ணீர் சிந்திய எத்தனையோ உறவுகளின் கண்கள் மூடி விட்டன. அந்த மூடிய கண்களுக்கு இந்த சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றதோ தெரியாது. இன்னும் எத்தனை கண்கள் மூடப் போகின்றதோ தெரியாது.

இதற்கிடையில் வீதியில் நிற்கும் உறவுகளாகிய எமக்கு நீதி கிடைக்க வேண்டும்.என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் [வரலாறும் மரபும்]

வரலாறும் மரபும் 1146

## சுவஉணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம்

### முகத்துவாரம், கொழும்பு

*" சித்தர் என்றும் சிறியர் என்றும் அறியொணாத சீவர்காள்!*
*சித்தர் இங்கு இருந்தபோது பித்தர் என்று எண்ணுவீர்!*
*சித்தர் இங்கு இருந்தும் என்ன பித்தன் நாட்டிருப்பாரோ?*
*அத்தன் நாடும் இந்தநாடும் அவர்களுக்கெலா மான்றே. "*

உலகில் தோன்றியுள்ள தொன்மையான சமயங்களுள் சைவசமயமும் ஒன்றாகும். பழமையும் பெருமையும், வளமான இலக்கியங்களும், செறிவான ஆராய்ச்சி நூல்களும், சைவசமயத்தின் தொன்மையை பறைசாற்றுகின்றன. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்றார் திருமூலர். நம்முடைய உள்ளத்திலேயே இறைவன் குடிகொண்டு விளங்குகின்றான் என்பதை, அப்பர்பெருமானும் "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" எனக் கூறுகின்றார். இவ்வாறு அகத்தே குடியிருக்கும் இறைவன் புறத்தே கோயில் கொண்டு விளங்கும் இடமே திருக்கோயில் ஆகும்.

இத்தகைய திருக்கோயில்கள் அமைந்துள்ள இடத்தில் வாழ்வதே பெருமை என்பதை, "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் பழமொழிகள் வாயிலாக நம் முன்னோர்கள் உணர்த்தியுள்ளனர். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழில்களைப் புரியும் எங்கும் நிறைந்த பரம்பொருளாம் இறைவன், ஆங்காங்கே கோயில்கொண்டு விளங்கும் மூர்த்திகளில் அருள்பாலிக்கின்றார். இறைவன் சகல உயிரினங்களுக்கும் அருள்பாலிக்கும் இடமே திருக்கோயில் ஆகும்.

இவ்வாறான திருக்கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஈழத்திலுள்ள பஞ்சஈஸ்வரங்கள் இந்துசமயத்தின் தொன்மைக்குச் சான்றாகக் காணப்படுகின்றன. இவ்வாறான சிவாலங்கள் பலவாக இருந்தபோதிலும் இலங்கையின் தலைநகரான கொழும்பில் பல்லினமக்களும் வாழும் சூழலில் முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள அருணாசலேஸ்வரர்சுவாமி ஆலயமும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாலயம் கடலொடுகூடிய சூழலில் அமைந்து அருளாட்சி புரிகின்றது.

இவ்வாலயம் சித்தர்பெருமானாகிய பெரிய ஆனைக்குட்டிச் சுவாமியார் என்ற மகானோடு தொடர்புபட்டுள்ளது. இந்தச் சித்தர்பெருமான் சமாதியடைந்தபின் அவர் நினைவாக, சேர்.பொன் அருணாசலம் மற்றும் அவரது துணைவியார் திருமதி. சுவர்ணாம்பிகை அம்மையார், இருவரதும் பெருமுயற்சியால் கொழும்பு முகத்துவாரம் சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வர சுவாமி ஆலயம் நிறுவப்பட்டது. இந்தியாவிலுள்ள பிரயாகையிலிருந்து மகரிஷி ஒருவர் வணங்கி வழிபாடியற்றிய அழகிய பாணலிங்கத்தையும், நந்தியையும் இங்கு கொண்டுவந்து எழுதருளச்செய்து குடமுழுக்கு இடம்பெற்றுள்ளது.

தொன்மைமிக்க சமயமாகிய இந்துசமயத்திலே பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள் என மூன்றுநிலையினர் காணப்படுகின்றனர். இறைவனை வாயார வாழ்த்தி, மனமாரக்கும்பிட்டு பணிந்து வணங்குவோர், பக்தர்களாக விளங்கினர். சீவனுக்குள் சிவனைக் கண்டு நற்குருவைப் பெற்றுக் காணப்பட்டோர், ஞானிகளாக விளங்கினர். அட்டமா சித்திகளைச் செய்து அருள்விளையாட்டுக்களைக் காட்டியோராக சித்தர்கள் காணப்பட்டனர். சித்தர்கள் என்ற சொல்லுக்கு, சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். அதாவது வீடுபேறு பெற்றவர்கள் என இவர்களைக் கொள்ளலாம். இவ்வாறான சித்தர்கள் ஈழத்திருநாட்டிலும் வாழ்ந்துள்ளனர். கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்றோரோடு இன்னும் பலரும் வாழ்ந்து சித்தர் பாரம்பரியத்தை செழிக்கச் செய்துள்ளனர். இவர்களுள் பெரியானைக்குட்டிச் சுவாமியாரும் குறிப்பிடத்தக்கவர்.

ஈழவளநாட்டில் இயற்கைஅழகொடு விளங்கும் கண்டிமாநகரில் பெரியானைக் குட்டிச் சுவாமிகள் வாழ்ந்துள்ளார்கள். சிறுபையனாக இருந்தகாலத்தில் கண்டிவீதிகளில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தார். கண்டி தெப்பக்குளத்திற்குப் பக்கத்தில் சலவைத் தொழிலாளி ஒருவர் வசித்து வந்தார். வீதிவழியே தினமும் திரியும் சிறுவனை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். சிறுவனின் நற்குணங்களை கண்டு வியப்படைந்த சலவைத்தொழிலாளி தமது மகனாக அவரைப் பேணி வந்தார். சிறுபையனாக இருந்தபோதிலும் பெரிய ஆனைக்குட்டிச்சுவாமிகள் வளர்ப்புத்தந்தையினுடைய தொழிலுக்குப் பேருதவியாக இருந்தார். ஆனைக்குட்டி என்ற பெயர் வளர்ப்புத் தந்தையால் இடப்பெற்ற பெயராகும்.

சிறுவயதில் ஒருநாள் கொல்லைப்பக்கம் சென்ற ஆனைக்குட்டிச் சுவாமிகள் "அம்மா அம்மா பாம்பு" எனச் சத்தமிட்டார். வளர்ப்புத்தாயார் ஓடிச்சென்று பார்த்தபொழுது கைகொட்டிச் சிரித்தார். இவ்வாறு மற்றுமொருநாளும் இவ்வேலை இடம்பெற்றது. மூன்றாவது முறை பாம்பு பாம்பு எனக் கூவியபொழுது எவரும் சென்று பார்க்கவில்லை. கொல்லைப்பக்கம் சென்ற ஆனைக்குட்டியைக் காணவில்லை என சென்ற பெற்றோர் அங்கு அவரைக் காணாது தவித்தனர். ஆனால் அவர் மலங் கழித்த இடம் தங்கக் குவியலாக இருப்பதைக் கண்டு அவற்றை எடுத்து பாதுகாப்பாக வைத்துவிட்டு, பலஇடங்களிலும் தேடியபொழுது, ஸ்ரீ கதிரேசன் ஆலய படியில் ஆனைக்குட்டி படுத்திருப்பதைக் கண்டனர். அவரை மீண்டும் வீட்டிற்கு வருமாறு வருந்தி அழைத்தனர்.

முற்பிறவியிலே உங்களுக்குத் தரவேண்டிய கடன் பாக்கி இருந்தது. அது நிறைவேறிவிட்டது. இப்பொழுது நீங்கள் யாரோ? நான் யாரோ? என்று அமைதியாகக் கூறிவிட்டு மௌனத்தில் ஆழ்ந்தார். நடைபெற்ற விடயங்களைக் கவனித்துக்கொண்டிருந்த கோயில் குருக்கள் ஆனைக்குட்டியின் வளர்ப்புப் பெற்றோரைப் பார்த்து, "இச்சிறுவனுக்கு மூளைக்கோளாறு போலத் தெரிகிறது பேசாமல் வீட்டிற்குச் சென்று விடுங்கள்" என்று கூறினார். தொடர்பில்லாமல் பாம்பு பாம்பு என ஆனைக்குட்டி தொடர்பில்லாமல் கூப்பிட்ட செய்தி நினைவிலாட, தாங்கொணாத் துயரோடு வீட்டிற்குத் திரும்பினர்.

**வளரும்...**



# இவ்வார ராசிபலன்

## 16-05-2025 வெள்ளி தொடக்கம் 23-05-2025 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** மாற்றுச் சிந்தனைக் உதயமாகும் வாரம். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. ஆபரணச் சேர்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். வீண் வம்புகள் அகலும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெறும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். பணியாளர் ஒத்துழைப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. உதவிகள் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். புதிய முதலீடு உருவாகும். பகையாளிகளின் நிலை மாறும். முன்னேற்றம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கற்பனை வளம் அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். திருப்தி ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நட்சத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**ரிஷபம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். சேமிப்பு வளரும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். தொழில் லாபம் உண்டு. தொட்ட காரியம் ஜெயமாகும். சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். பேச்சில் நிதானம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. நினைத்த விஷயம் நிறைவேறும். ஆபத்துக்கள் விலகும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பங்குச்சந்தையில் பலன் கிடைக்கும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். புதிய முயற்சி பலிதமாகும். ஊதிய உயர்வு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். இடையூறு அகலும். வேதனைகள் சாதனைகள் ஆகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். கடன் விஷயத்தில் கவனம் தேவை. திருமண பேச்சு முடிவிற்கு வரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். கலகலப்புக்கூடும். ஆசைகள் நிறைவேறும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். இனியத் தகவல் வந்து சேரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். சந்தோஷம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வழக்கமான பணியில் மாற்றம் வரும். சுபச்செய்தி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். வசந்தம் தேடி வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். எதிரிகள் தொல்லைகள் ஒழியும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முன்னேற்றமான காலம். நட்பு வட்டம் விரிவடையும். சுபச்செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. உடல் சோர்வு நீங்கும். திரு'டிகள் விலகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். மனமகிழ்ச்சி கிட்டும். எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: இளம்ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,G




**கடகம்:** ஆளுமைத்திறன் அதிகரிக்கும் வாரம். திருப்தி தரும் காலம். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிநதனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களால் நன்மை உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். உதவும் குணம் அதிகரிக்கும். பிரச்சனைகள் விடுபடும். பதவி உயர்வு ஏற்படும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். இடையூறுகள் அகலும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத்தேவை அதிகரிக்கும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உள்ளம் மகிழும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். வாகன மாற்றம் நன்மை தரும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். ஆசைகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ராகு பகவான், அதிர்ஷ்ட எண்: 3,8,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,C




**சிம்மம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். வியாபாரம் சிறக்கும். விரயம் குறையும். சகோதரி வகையில் சகாயம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் கவனம் தேவை. களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். திடீர் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் வளர்ச்சி கூடும். முயற்சிகள் பலிதமாகும். பெற்றோர்களால் பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். சாதனையை சந்திப்பீர்கள். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். அரசியல் ஆர்வம் ஏற்படும். விரயங்கள் அதிகரிக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உற்சாகம் களை கட்டும். உயர் பதவி யோகமுண்டு. தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்ல செய்திகள் நாடி வரும். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆழமான மேன்மைகள் அமையும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். பாக்கிகள் வசூலாகும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். முயற்சிகளில் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். இரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கலனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்லச் செய்தி நாடி வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,6,9,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**கன்னி:** மேன்மைகள் சந்திக்கும் வாரம். தடைகள் விலகும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் அதிகரிக்கும். மனநிம்மதி குறையும். தனசேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலை பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். தனலாபம் பெருகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். உடல்பொலிவு கூடும். முதலீடு தவிர்க்கவும். வரவு திருப்தி தரும். வழக்குகள் தாமதமாகும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் கிடைக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். மதிநுட்பம் தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. பிள்ளைகள் கல்வி மேம்படும். பதவி உயர்வு தாமதமாகும். செய்த்தொழிலில் கவனம் தேவை. மற்றவர்களால் தொல்லை உண்டு. மனைவியால் நன்மை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். காரியம் வெற்றி பெறும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**துலாம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். பொன்னான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். நினைத்த விஷயம் நிறைவேறும். பணமுயற்சி பலன் தரும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். ஊக்கம் அதிகரிக்கும். சிக்கனம் தேவை. கல்வியில் மேன்மை உண்டு. கடன் வசூலாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சீறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்ப ஒற்றுமை மேம்படும். பொருளாதாரம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. வியாபாரம் விருத்தியாகும். வெளியூர் பயணம் உண்டு. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உடல்நலம் சிறக்கும். தேகப்பலன் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. வாழ்த்துக்கள் வந்து சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிர்ஷ்ட எண்: 4,7,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q

***(தொடர்ச்சி 22 பக்கம்)***

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI

Pawn Brokers





30 வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

Pawn Bank Inc.™

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்தி வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நாட்டம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பொறாமைகள் விலகும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். வீண்செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தான தர்மங்கள் பலன் தரும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குதூகலம் தாண்டவமாடும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,2,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். லாபமான காலம். தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புதுமுயற்சிகளை தள்ளிப்போடவும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. பங்குச்சந்தையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல் நலம் சீராகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G




**மகரம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். தேவைகள் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். விரோதங்கள் விலகும். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித்தரும். மருத்துவச் செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் செலவுகள் அதிகமாகும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். வாழ்வில் வசந்தம் கூடும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. பிள்ளைகளால் தனவரவு உண்டு. இனம் புரியாத சந்தோ'ம் ஏற்படும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெருமைமிக்க காலம். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். பெண்களால் பெருமை சேரும். அவமானங்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பணப்பற்றாக்குறை நீங்கும். கொண்டாட்டங்கள் கூடும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியல் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9
அதிர்ஷ்டநிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,E




**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். சாதகமான வாய்ப்பு அமையும். ஆண்களின் அதிகாரம் உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். தாயின் பிரார்த் தனையால் தகுதிகள் உயரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வரன் வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும். ஏற்றமதி தொழிலில் லாபம் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**மீனம்:** சிறப்போடும், பொறுப்போடும் செயல்படும் வாரம். எண்ணங்கள் நிறைவேறும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புகள் அதிகமாகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாயம் பலன் தரும். வீடுருபவ் மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கிருபைகள் சேரும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதரி வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. சுபிட்ஷம் பெருகும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நெருக்கடிகள் குறையும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J

## முள்ளிவாய்க்கால் பேரவலம் (மே 18)

பாதுகாப்பு வலயமென்று பசப்பு வார்த்தைகூறி
பரந்து வாழ்ந்த எம் பண்பான மக்களை
முள்ளிவாய்க்கால் என்ற மரணப்பொறிக்கு வரச்செய்து
முழுக் கதையையும் முடித்துவைத்த நாளே மே 18
இருபத்தாறு ஆண்டுகள் பறந்தோடி விட்டாலும்
நித்தம் நித்தம் நினைவில் வரும்நாளே இந்நாள்
பாதுகாப்பென நம்பிய பதுங்குகுழிகள் சவக்குழியாகின
பாதகர் மருத்துவ மனைகளையும் பதம் பார்த்தனர்
காயப்பட்ட வரும் காயம் ஆற்றியோரும் காற்றோடு கரைந்தனர்
கொத்துக் குண்டுகளையும் கந்தக எறிகணைகளையும் கொட்டி
கொத்துக் கொத்தாக எம்மக்களை கொன்றொழித்த நாள்
கை கால் இழந்தும் கட்டிய கணவனை இழந்தும்
பெற்ற பிள்ளையை இழந்து பிரியமான மனைவியை இழந்தும்
பேதலித்து நின்றனர் பெற்றோரும் உறவுகள்
கொஞ்சி விளையாடிய குழந்தைகள் முதியவர்
குடும்பமாகக் கொல்லப்பட்ட கொடிய நாள்
வீர மங்கையரான எம் விவேகப் பெண்களை
சிங்கள மிருகங்கள் சின்னாபின்ன மாக்கியநாள்
சரணடைந்தோரையும் சக்தியற்று இருந்தோரையும்
இனவெறியர் இல்லாமல் ஆக்கிவிட்ட நாள்
எஞ்சிய மக்களை ஏமாற்றி அழைத்துச்சென்று
முட்கம்பி வேலிகளுள் முடக்கிய நாள்
வெள்ளைக் கொடியோடு போனஎம்வீரர்களை
வீணர்கள் வெட்டி வீழ்த்திய நாள்
வற்றிய முலையில் வாய் வைத்தபடி
வெந்துபோன வாலிபம் மாறாத தாயும் சேயும்
முழுமாதக் கற்பிணிகளை மூத்தோரை
பல்குழல் பீரங்கிகள் பதம்பார்த்த நாள்
சுடலை காணாத செத்த பிணங்கள்
நினைத்து நினைத்து நிலைகுலைந்த உறவுகள்
தாலாட்டுக் கேட்டு தூங்கிய சிறிசுகள்

ஒப்பாரி ஓசையுடன் ஓய்ந்துபோன நாள்
கொள்ளிக் குடமுமின்றி கொள்ளிவைக்க ஆளுமின்றி
குதறி எறியப்பட்ட குடும்ப உறவுகள்
ஐ.நா வரும் அமெரிக்கா வரும் இந்தியா வருமென
எதிர்பார்த்து ஏங்கிய மக்கள் எல்லோரையும்
கூட்டுச் சதிசெய்து கொன்றொழித்த கொடூரநாள்
சிதறுண்ட சீவன்கள் சின்னாபின்ன மாகியபடி
காரிருள் கடந்த காலை வேளையில்
நடைப்பிணங்களும் நடவாத பிணங்களுமே எஞ்சியிருந்தன
முள்ளிவாய்க்கால் முடிந்த முடிவல்ல ஆரம்பம்
மே 18 அழுவதற்கல்ல எழுவதற்கு
காகிதத்தில் இடம் உள்ளது கவிதை எழுத
இதயத்தில் வரிகள் இல்லை வலிகளைத் தவிர.

*(2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் நடந்த பேரவலத்தின் நினைவை ஒட்டி எழுதப்பட்ட கவிதை.)*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# மரண அறிவித்தல்

பிறப்பு:
22 - 05 - 1956



இறப்பு:
13 - 05 - 2025

## அமரர். நாகமணி சிவராமன் (அப்பன்)

**(ஓய்வு பெற்ற சிவில் தொழில்நுட்ப உத்தியோத்தர் - வவுனியா நகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை)**

**பதுளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி, மற்றும் வவுனியா ஓயார் சின்னக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி சிவராமன் அவர்கள் கடந்த 13-05-2025 செவ்வாய்க்கிழமையன்று வவுனியாவில் இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி (முன்னாள் பதுளை ஒளியாமண்டி தோட்ட எழுதுவினைஞர்) - செல்லம்மா தம்பதியின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (முன்னாள் இலங்கை புகையிரத் திணைக்களம்) - சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மருமகனும்

செந்தில்மணி (ராணி) அவர்களின் அன்புக் கணவரும்,

செந்தூரன் (வவுனியா - N. வைத்திலிங்கம் கொம்பனி), லாவண்யா, கோபிராம் (வவுனியா மாவட்டச் செயலக உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அசோதரன், திலக்சா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

காலஞ்சென்ற மகேந்திரன் (முன்னாள் அரச பெருந்தோட்ட தலைமை எழுதுவினைஞர் - இரத்தினபுரி), மகாலட்சுமி (முன்னாள் ஆசிரியை), தேவதாஸ் (பேர்லின், ஜேர்மனி), ஆர்.என். லோகேந்திரலிங்கம் (கனடா, உதயன் பத்திரிகை நிறுவனர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமணசாமி (முன்னாள் ஆசிரியர்), தங்கமலர் (பாப்பா), மற்றும் சாவித்திரி (முன்னாள் ஆசிரியை - ஜேர்மனி). பத்மலோசனி (பாப்பா - கனடா), காலஞ்சென்ற சந்தானலட்சுமி (கனடா), ஜெகதாம்பிகை (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும்,

செல்வன் கிருத்திக் அவர்களின் ஆசைப் பேரனாரும் ஆவார்.

***அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-05-2025 அன்று வியாழக்கிழமை முற்பகல் தொடக்கம் வவுனியா ஓயார் சின்னக்குளத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பின்னர் தகனக்கிரியைகள் பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்தில் நடைபெற்றது.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

அசோதரன் (மருமகன்): 0742693804 | செந்தூரன் (மகன்): 0776114257 | கோபிராம் (மகன்): 0776983460

வதிவிட விலாசம்: 12/01, 2ம் ஒழுங்கை, ஓயார் சின்னக்குளம் - வவுனியா















26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்




உதயம் 1519 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 16, 2025



## The Grand Opening Ceremony of Manoj Rajasri Law-Legal Leo's Office, took place on last Saturday in Scarborough.

Manoj Rajasri Law-Legal Leo என்னும் சட்ட நிறுவனத்தின் திறப்பு விழா கடந்த 10ம் திகதி சனிக்கிழமையன்று மதியம் 105- 2855 Markham Road IN Scarborough. என்னும் விலாசத்தில் அமைந்துள்ள புதிய அலுவலகத்தில் நடைபெற்றது. ஒன்றாரியோ மாகாணத்தின் சுகாதார அமைச்சின் இணையமைச்சர் விஜேய் தணிகாசலம் மற்றும் முதியோர் விவகார அமைச்சர் Raymond Cho.
ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் அழைக்கப்பட்டிருந்தனர். இணையமைச்சர் விஜேய் தணிகாசலம் அவர்கள் சமூகமளித்திருக்க சட்டத்தரணி மனோஜ் அவர்களின் பெற்றோர் திரு.திருமதி ராஜஸ்ரீ தம்பதி நாடாவை வெட்டி புதிய சட்ட அலுவலகத்தைத் திறந்து வைத்தார்கள். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## ஒன்ராறியோ கல்விச் சபைகள் பலவற்றிலும் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைத் திட்டம் விரிவடைகிறது



2021ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமை - சட்டமூலம் 104 நிறைவேற்றப்பட்டதிலிருந்து, மே 12 முதல் மே 18 ஒன்றாறியோவின் கல்விச்சபைகளெங்கும் அதன்மட்டிலான ஈடுபாடும் அதற்கான அங்கீகாரமும் அதிகரிந்து வருகின்றன. சட்டமூலம் 104 ஆனது, இப்போது இன அழிப்பை நினைவுகூருதல் மற்றும் அதுதொடர்பான கற்பித்தல் மட்டில் மாநில அளவில் உறுதியான நிலையை எட்டியுள்ளது.
தமிழின அழிப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரவும், இன அழிப்பிலிருந்து உயிர் தப்பியவர்கள் தம் தலைமுறை-களினூடே அனுபவித்துவரும் துயர்களைப் பகர்ந்துகொள்ளவும், இந்த திட்டம் வழிவகுக்கும். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

## தமிழர்களின் நில இருப்பை உறுதிபடுத்த சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் பிரித்தானிய, கனடிய, அரச பிரதிநிதிகளிடம் தமிழ் தேசிய பேரவை கோரி வலிறுத்தல்



குருந்தூர்மலையில் பௌத்த தேரர் மற்றும் தொல்பொருட் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள தனியார் காணிகளில் சொந்த நிலத்தில் உழவு நடவடிக்கையில் ஈடுபட்டஇரண்டு விவசாயிகள் கைது, தையிட்டி சட்டவிரோத விகாரை அகற்றப்பட்டு காணிகள் உரிமையாளர்களிடம் கையளித்தல் வடக்கில் தமிழர்களின் நில இருப்பை உறுதிபடுத்த சர்வதேச சமூகம் அவசர தலையி வேண்டும் என கோரி தமிழ் தேசிய பேரவையினர் செயற்படுவதாக தமிழ் தேசிய பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பொன்னம்பலம். கஜேந்திரகுமார் தெரிவித்தார்.
தமிழ் தேசிய பேரவையினருக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பற்றிக்கையும் மற்றுமகனேடிய உயர்ஸ்தானிகர் **Eric Walsh** அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அந்தந்த துதுவராலயங்களில் கடந்த 14ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுது.
(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## நூலகத்தின் முக்கியத்துவத்தை யாழ்ப்பாண நூலக எரிப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம் என உணர்வுபூர்வமாகத் தெரிவித்த வட மாகாண ஆளுநர்!



நூலகம் ஒன்று எவ்வளவு தூரத்துக்கு முக்கியமானது என்பதை நாங்கள் யாழ்ப்பாண நூலக எரிப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். இன்று உங்கள் பாடசாலைக்கு நன்கொடையாக அமைத்து வழங்கப்பட்டுள்ள நூலகத்தை உரிய வகையில் பயன்படுத்தி உங்கள் கிராமத்துக்கும் - சமூகத்துக்கும் நற்பெயரைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என மாணவர்களிடம் கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள்.
தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட "மாணிக்கம் பூமணி ஞாபகார்த்த நூலகம் கடந்த செவ்வாய்க்கிழமையனறு (13.05.2025) திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ந.வில்லியம் சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர். (தொடர்ச்சி 4ம் பக்கம்)

## 19வது ஆண்டில் மேடையில் நாம் பார்த்து பரவசமடைந்த ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் "சிவத்தமிழ் விழா"!







10-05-2025 அன்று கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற "சிவத்தமிழ் விழா" தனது 19 வது ஆண்டில் வழமை போன்ற கம்பீரத்துடனும் நேர்த்தியுடனும் தொடர்ச்சியாக பல மணி நேரங்கள் நடைபெற்று பார்வையாளர்களைக் கவர்ந்தது என்றால் அது மிகையாகாது.
ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்த்தானமும் வரசித்தி இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்திய இந்த விழாவிற்கு நூற்றுக்கணக்கானவர் கலந்து சிறப்பித்தமை போற்றுதற்குரியதாகும். மாணவ மாணவிகள்- அவர்தம் பெற்றோர்கள்- ஆலயத்தின் பக்தர்கள் மற்றும் தொண்டர்கள்- சிறப்பு விருந்தினர்கள் என பலதரப்பினரும் பொறுமையாக அமர்ந்திருந்து மாணவச் செல்வங்களின் படைப்புக்களை பரவசத்துடன் ரசித்தனர். (தொடர்ச்சி 8ம் பக்கம்)